




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 233 05.04.2026 ஞாயிற்றுக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 233 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(5-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-22
பிறை: தேய்பிறை
திதி
திருதியை காலை 11.51 வரை பிறகு சதுர்த்தி.
நட்சத்திரம்:
விசாகம் இரவு 11.49 வரை பிறகு அனுஷம்.
யோகம்
மரணயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி
சூலம் – மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி.

மேஷம் ................. ஜெயம்
ரிஷபம் ................. அன்பு
மிதுனம் ................. அமைதி
கடகம் ................. ஆதரவு
சிம்மம் ................. சாந்தம்
கன்னி ................. கீர்த்தி
துலாம் ................. ஆக்கம்
விருச்சிகம் ................. நட்பு
தனுசு ................. களிப்பு
மகரம் ................. தாமதம்
கும்பம் ................. வெற்றி
மீனம் ................. கவனம்

# இந்தித் திணிப்பை ஏற்கிறதா அதிமுக, என்டிஏ கூட்டணிக் கட்சிகள்?

## முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஏப்.5:**

சிபிஎஸ்இ 6-ஆம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கைதிணிப்பைஎடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவும், அதன் என்டிஏ கூட்டணிக் கட்சிகளும் ஏற்றுக்கொள்கின்றனரா? அல்லது நமது மாணவர்களின் எதிர்காலம், அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக ஒரே ஒரு முறையாவது முதுகெலும்போடு எதிர்ப்பார்களா? என திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் 'எக்ஸ்' பக்க பதிவில், தேசியக் கல்விக் கொள்கை 2020-ஐச் சார்ந்து, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம் என்பது சாதாரண கல்விச் சீர்திருத்தம் அல்ல; அது மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் வகையிலான, நன்கு திட்டமிடப்பட்ட ஆழ்ந்த கவலைக்குரிய முயற்சியாகும்.



"இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்" என்ற போர்வையில், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்மைத்துவம் நிறைந்த மொழிப்பாரம்பரியத்தைத் திட்டமிட்டு ஒதுக்கி, இந்திக்கு முன்னுரிமை அளித்து மையப்படுத்தும் செயலை அரசியல் நோக்கத்துடன் பா.ஜ.க. தலைமையிலான என்டிஏ அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. "மும்மொழிக் கொள்கை" என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும்.

தென் மாநில மாணவர்களைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம், கட்டாய இந்தி என்பதைக் கடந்து வேறேதுமில்லை. இருப்பினும், இதில் ஒருவருக்கொருவர் இடையிலான பரிமாற்றம் எங்கே இருக்கிறது? இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது வங்கம், மராத்தி உள்ளிட்ட மொழிகளைக் கட்டாயமாகப் படிப்பார்களா? இதுகுறித்த தெளிவின்மை, இதிலுள்ள ஒருசார்பையும்-பாகுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

இந்த முரண் வெளிப்படையானது, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாக்க முடியாத - தொடர்ச்சியாகப் போதிய தமிழாசிரியர்களை நியமிக்கத் தவறிய இதே ஒன்றிய அரசு, இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம் என்று மாநிலங்களுக்குப் பாடம் எடுக்க நினைக்கிறது. இது பொறுப்புணர்வல்ல; கபட நாடகத்தின் உச்சம்!

ஆசிரியர்களின் எண்ணிக்கை, போதிய பயிற்சிக்கான திறன் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை குறித்த உண்மைக் களநிலவரத்தை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? இந்தச் செயல்திட்டத்தை அமல்படுத்த தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்? கல்வித் துறையில் மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தும் இந்த நகர்வுக்கான நிதி ஆதாரம் எங்குள்ளது? எவ்விதத் திட்டமிடலும், வளங்களும், பொறுப்பும் இல்லாத உள்நோக்கம் கொண்ட மற்றுமோர் திட்டமாகவே இது தோன்றுகிறது.

இது மொழி குறித்த கேள்வி மட்டுமல்ல; நியாயம், கூட்டாட்சி மற்றும் சமவாய்ப்புகள் குறித்த கேள்விகளுமாகும். இந்தி பேசும் மாணவர்களைக் கட்டமைப்புரீதியான சலுகைகளை அளித்து, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுத்துவதோடு, மாநிலங்களுக்கிடையே மேலும் ஏற்றத்தாழ்வுகளையே இது உண்டாக்கும்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முன்னோக்கி நகரும் வேளையில், நம் குழந்தைகள் எதிர்காலத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, அனிமேஷன் - விஷுவல் எஃபக்ட்ஸ் - கேமிங் - காமிக்ஸ் உள்ளிட்ட துறைகளில் அவர்களது திறனை மேம்படுத்தி, அவர்களது அறிவியல் பார்வையையும் திறனாய்வுச் சிந்தனையையும் ஊக்குவிக்க வேண்டும். மாறாக, இத்தகைய பிற்போக்குத்தனமான, இறுக்கமான மொழிச் சுமை அவர்களது முன்னேற்றத்தைத் தடுப்பதாக உள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் தொடர்ச்சியாக எழுப்பிய நியாயமான - ஜனநாயகப்பூர்வமான கவலைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்தியைத் திணிப்பதில் மத்திய அரசு மும்முரமாக இருப்பது தெரிகிறது. இந்தச் செயல், கூட்டுறவுக் கூட்டாட்சியியலுக்கு எதிரானது, கோடிக்கணக்கான இந்தியர்களின் மொழி அடையாளங்களை நேரடியாக அவமதிக்கும் செயல்.

இந்தியாவின் வலிமை என்பது, பன்முகத்தன்மையில்தான் இருக்கிறதே தவிர, திணிக்கப்படும் ஒற்றைத்தன்மையில் இல்லை. இந்தச் சமநிலையைக் குலைக்கும் எத்தகைய முயற்சிகளும் தவறானவை மட்டுமல்ல, ஆபத்தானதுமாகும். நம் நாட்டின் அடிப்படையான பன்மைத்துவத்தையே தாக்கும் இத்தகைய கொள்கைகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும். எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவும், அதன் என்டிஏ கூட்டணிக் கட்சிகளும் இந்தத் திணிப்பை ஏற்றுக்கொள்கின்றனரா? அல்லது நமது மாணவர்களின் எதிர்காலம், அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக ஒரே ஒரு முறையாவது முதுகெலும்போடு எதிர்ப்பார்களா?

மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கை என அவர் கூறியுள்ளார்.

# தேர்தலில் போட்டியிடாதது ஏன்? அண்ணாமலை விளக்கம்

**சென்னை, ஏப்.5:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடாதது குறித்து தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை விளக்கமளித்துள்ளார்.

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக போட்டியிடும் 27 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியல் நேற்று(ஏப். 3) வெளியானது.

மயிலாப்பூரில் தமிழிசை சௌந்தரராஜன், அவினாசியில் எல். முருகன், கோவை வடக்கில் வானதி சீனிவாசன், சாத்தூரில் நயினார் நாகேந்திரன், விளவங்கோடு தொகுதியில் எஸ். விஜயதாரணி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இந்த தேர்தலில் அண்ணாமலை போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட



நிலையில் அவர் போட்டியிடவில்லை. அண்ணாமலை தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்று மத்திய அமைச்சரும் தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளருமான பியூஷ் கோயல் தெரிவித்தார்.

இந்நிலையில் அண்ணாமலை இதுபற்றி செய்தியாளர்களுடன் பேசுகையில்,

"நான் தேர்தலில் போட்டியிடாதது குறித்து பல யூகங்களை சமூக ஊடகங்களில் பலரும் எழுதுகிறார்கள். நான் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை என்று நீண்ட நாள்களுக்கு முன்பாகவே எழுத்துப்பூர்வமாகஒருகடிதத்தை எழுதி கொடுத்திருந்தேன். மாநிலத்தில் மையக்குழு கூட்டத்தில்கூட என்னுடைய கருத்தைநான்சொல்லியிருந்தேன். மையக்குழுவில் இருந்து தலைமைக்குச் சென்ற பட்டியலில் என் பெயர் இல்லை, மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், தேசிய தலைவர் நிதின் நவீன் ஆகியோரிடம் நான் இதுபற்றி பேசியிருந்தேன்.

அதன்படி கட்சி என்னுடைய விருப்பத்தின்பேரில் என்னை பிரசாரத்திற்கு பயன்படுத்தியது எனக்கு மகிழ்ச்சிதான். தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நான் பிரசாரம் செய்யவிருக்கிறேன், அதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

நான் எந்த தொகுதியும் கேட்கவில்லை, நான் எந்த தொகுதிக்கும் போட்டியிடவில்லை. அனைத்து தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் இருக்கிறார்கள். கோவையில் ஏற்கெனவே எம்எல்ஏ இருக்கிறார்கள். அவர்கள் போட்டியிடுவதுதான் சரியானது. அதேபோல மொடக்குறிச்சி உள்ளிட்ட தொகுதிகளில் கட்சிப் பணி செய்பவர்களுக்கே வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனால் நான் கடந்த 45 நாள்களில் நான் யாரிடமும் எந்த தொகுதியும் கேட்கவில்லை, நான் கேட்கவும் மாட்டேன், அது என்னுடைய பழக்கமும் இல்லை" என்று விளக்கமளித்தார்.

# தொழில் மற்றும் வணிக டீசல் விலை லிட்டருக்கு ரூ.17.19 குறைந்தது

**சென்னை, ஏப்.5:**

தொழில் மற்றும் வணிக ரீதியான டீசல் விலை லிட்டருக்கு ரூ.17.19 குறைந்துள்ளது.

அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே நடைபெறும் போர் காரணமாக ஈரான் தனது கட்டுப்பாட்டில் உள்ள ஹார்மூஸ் நீரிணையை முடக்கியது. இதனால் உலக அளவில் எண்ணெய்க் கப்பல்களின் போக்குவரத்து தடைபட்டுள்ளது. மேற்கு ஆசிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வர வேண்டிய கச்சா எண்ணெய், எல்பிஜி ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக நாடு முழுவதும் காஸ் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

மேலும் கச்சா எண்ணெய் விலை உயர்வால் தொழில் மற்றும் வணிக ரீதியான டீசலின் விலை கடந்த மாதம் 20-ம் தேதி லிட்டருக்கு ரூ.22 அதிகரிக்கப்பட்டது. இதனிடையே கடந்த சில நாட்களுக்கு பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி குறைக்கப்பட்டது. இந்நிலையில் தொழில் மற்றும் வணிகரீதியான டீசல் விலையை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் குறைத்துள்ளன. இதுகுறித்து பெட்ரோலிய



விற்பனையாளர்கள் சங்க தலைவர் கே.பி.முரளி வெளியிட்ட அறிக்கை: தொழில் மற்றும் வணிகப் பயன்பாட்டுக்கான டீசல் விலையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய விலை குறைப்பை நாங்கள் வரவேற்கிறோம். சர்வதேச அரசியல் சூழலால் கடந்த மார்ச் மாதம் ஒரு லிட்டர் ரூ.109.59 என்ற உச்சத்தை எட்டிய இந்த மொத்த விற்பனை டீசல் விலை, தற்போது ஏப்ரல் மாதம் ரூ.92.40 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு லிட்டருக்கு ரூ.17.19 வரை விலை குறைந்துள்ளது.

சென்னையில் தற்போதைய சில்லறை விற்பனை விலை லிட்டருக்கு ரூ.92.48 ஆகவும், தொழில், வணிக டீசல் விலை லிட்டருக்கு ரூ.92.40 ஆகவும் உள்ளது. இந்த விரைவான நடவடிக்கை சில்லறை விலை நிலைத்தன்மையை உறுதிப்படுத்தி, தமிழகத்தில் உள்ள பெட்ரோலிய விற்பனையாளர்களுக்கு ஆதரவாக உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அமெரிக்க தாக்குதலுக்கு பதிலடியாக வளைகுடாவில் 8 பாலங்களை தகர்ப்போம்: ஈரான் எச்சரிக்கை

**டெஹ்ரான், ஏப்.5:**

ஈரானின் மிகப் பெரிய பாலத்தை அமெரிக்கா தகர்த்ததால், வளைகுடா நாடுகளில் உள்ள 8 பாலங்களை தகர்க்கப்போவதாக ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரான் தலைநகர் டெஹ்ரானையும், கராஜ் நகரையும் இணைக்கும் வகையில் 136 மீட்டர் உயரத்துக்கு கட்டப்பட்டு வந்த பி1 என்ற பாலத்தின் மீது அமெரிக்கா நேற்று குண்டு வீசியது. இதில் பாலத்தின் ஒரு பகுதி தகர்ந்தது. இந்த தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர், 95 பேர் காயம் அடைந்தனர்.

இது குறித்து சமூக ஊடகத்தில் கருத்து தெரிவித்த அதிபர் ட்ரம்ப், "ஈரானின் மிகப் பெரிய பாலம் தகர்க்கப்பட்டது. அதை மீண்டும் பயன்படுத்த முடியாது. அமெரிக்காவுடன் ஈரான் ஒப்பந்தம் செய்யாவிட்டால், ஈரானில் ஒன்றும் இருக்காது" என கூறியிருந்தார். இதற்கு எக்ஸ் தளத்தில் பதில் அளித்துள்ள ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, "பொது கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம் ஈரானியர்களை சரணடைய வற்புறுத்த முடியாது. இது எதிரி தோல்வியடைந்ததைதான் காட்டுகிறது" என்றார்.

இந்நிலையில் குவைத்தில் உள்ள ஷேக் ஜாபர் அல்-அகமது அல்-சபா கடல் பாலம், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஷேக் சையது பாலம், அல் மக்தா பாலம் மற்றும் ஷேக் கலிபா பாலம், சவுதி அரேபியாவையும் - பஹ்ரைனையும் இணைக்கும் தி கிங் பகத் பாலம், ஜோர்டானில் உள்ள தி கிங் உசேன் பாலம், டாமியா பாலம், மற்றும் அப்டான் பாலம் என 8 பாலங்களைத் தகர்க்கப் போவதாக ஈரான் கூறியுள்ளது.

# சாத்தான்குளம் வழக்கில் 9 போலீஸாருக்கும் அதிகபட்ச தண்டனை: மத்திய அரசு மனுவில் தகவல்

**மதுரை, ஏப்.5:**

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் சிறையில் இருக்கும் போலீஸார் 9 பேருக்கும் அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என மதுரை நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் ஜெயராஜ். இவர் மகன் பென்னிக்ஸ். இவர்கள் சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர்.

கடந்த 2020 ஜூன் 19-ல் கரோனா ஊரடங்கு கட்டுப்பாட்டு நேரம் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாகக் கூறி ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் சாத்தான்குளம் போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

பின்னர் காவல் நிலையத்தில் வைத்து இரவு முழுவதும் போலீஸார் தாக்கியதில் முதலில் பென்னிக்ஸ், அடுத்து ஜெயராஜ் உயிரிழந்தனர். இது தொடர்பாக காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோரை சிபிஐ கைது செய்தது.



இந்த வழக்கை மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன் விசாரித்து 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்தார்.

பின்னர் இவர்களுக்கான தண்டனை தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்கவும், 9 பேரின் உடல் நிலை, மனநிலை குறித்து மருத்துவர்கள் அறிக்கை தாக்கல் செய்யவும் நீதிபதி உத்தரவிட்டார்.

அதன்படி மாநில அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மருத்துவ அறிக்கைகளும் தாக்கல் செய்யப்பட்டன.

பின்னர் நடைபெற்ற விசாரணையில் சிபிஐ தரப்பிலும், ஜெயராஜ், பென்னிக்ஸ் தரப்பிலும், 'அரிதினும் அரிதான வழக்காக கருதி 9 பேருக்கும்தூக்கு தண்டனை வழங்க வேண்டும்' என வாதிடப்பட்டது.

மனுதாரர் சார்பில் 'தந்தை, மகன் இருவரும் திட்டமிட்டு கொலை செய்யப்படவில்லை. திடீர் ஆத்திரம் காரணமாக நடந்த சம்பவத்தில் இருவரும் உயிரிழந்துள்ளனர். இதனால் குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும்' என வாதிடப்பட்டது. பின்னர் 9 பேருக்கும் ஏப். 6-ல் தண்டனை அறிவிக்கப்படும் என்று கூறி விசாரணையை நீதிபதி தள்ளிவைத்தார்.

**பாரபட்சம், கருணை காட்டக் கூடாது**

இந்நிலையில் சாத்தான்குளம் வழக்கு தொடர்பாக மத்திய அரசு சார்பில் விசாரணை நீதிமன்றத்தில் மின்னஞ்சல் வழியாக பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், சாத்தான்குளம் கொலை வழக்கு போலீஸ் காவல் மரணமாகும். இதில் குற்றவாளிகளுக்கு பாரபட்சம், கருணை காட்டக் கூடாது. அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.




## ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் பிரச்சாரம்



**சென்னை, ஏப்.05:**

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக, நேற்று ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் அவர்கள் ஆர்.கே.நகர் 3வது சர்க்கிள் மேற்கு பகுதி 38-வது வட்டத்தில் வாக்கு கேட்டு பிரச்சாரத்தை தொடங்கினார்.

இந்நிகழ்ச்சியில்வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி. மதாரம்மா கனி பாரூக் அவர்கள் வேட்பாளருடன் கலந்துகொண்டு வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் மாவட்ட தலைவர் T.V.துரைராஜ், மாவட்ட அமைப்பு செயலாளர் I.முகமது பாரூக், மாவட்ட பொருளாளர் B.கார்த்திகேயன், சர்க்கிள் தலைவர்கள் வால்டாக்ஸ் ரோடு J.ரமேஷ், S.K.வீராரெட்டி, கூடுதல் பொறுப்பாளர்கள் D.K. மூர்த்தி, M.மோகன்குமார், செய்தி தொடர்பாளர் D.B.பாஸ்கர், வட்ட தலைவர்கள் உட்பட காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர்.

## விழுப்புரம் அருகே ஒட்டனந்தல் முருகன் கோயிலில் 9 எலுமிச்சம் பழங்கள் ரூ.1.43 லட்சத்துக்கு ஏலம்



**விழுப்புரம், ஏப்.05:**

திருவெண்ணெய்நல்லூர் அடுத்த ஒட்டனந்தல் கிராமம் இரட்டைக் குன்றின் மீது ரத்தினவேல் முருகன் கோயில் உள்ளது. கருவறையில் வேல் மட்டுமேஇருக்கும்.இக்கோயிலில் பங்குனி உத்திர திருவிழா கடந்த 1-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

பங்குனி உத்திர திருவிழா உற்சவத்தில்வேலில் தினசரி படைக்கப்படும் 9 எலுமிச்சம் பழங்கள், இடும்பன் பூஜையில் வைத்து ஏலம் விடும்நிகழ்வு நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றது. முதல் நாள் எலுமிச்சம் பழம், ரூ.45 ஆயிரத்து 500-க்கு ஏலம் போனது.

இதேபோல் இதர 8 பழங்களும் ரூ.15 ஆயிரம், ரூ.16 ஆயிரத்துக்கு ஏலம் போனது. இதன்மூலம் 9 எலுமிச்சம் பழங்களையும் ரூ.1 லட்சத்து 43 ஆயிரத்துக்கு பக்தர்கள் ஏலம் எடுத்தனர். வேலில் சொருகப்பட்ட எலுமிச்சம் பழத்தை உட்கொண்டால், குழந்தை வரம், திருமணம் கைகூடுதல் மற்றும் குடும்ப பிரச்சினைகள் நீங்கும் என்பது இக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் நம்பிக்கையாகும்.

ஏலத்தில், விழுப்புரம் மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் பங்கேற்றனர். எலுமிச்சம் பழத்தை ஏலம் எடுத்தவர்கள், தங்கள் உடலில் தண்ணீரை ஊற்றிக் கொண்டு பூசாரி முன்பு மண்டியிட்டு எலுமிச்சம் பழத்தை பெற்றுக் கொண்டனர். இடும்பனுக்கு படைக்கப்பட்ட கருவாட்டு குழம்பு சாதம் பிரசாதமாக அனைவருக்கும் வழங்கப்பட்டது.

## காங்கிரஸில் சேர்ந்து ஒரே வாரத்தில் ஜி.கே.மணியின் மகனுக்கு சீட் கிடைத்த ரகசியம்!



**சென்னை, ஏப்.05:**

கடந்த மாதம் 28-ம் தேதி, பாமக கவுரவத் தலைவர் ஜி.கே.மணியின் மகன் தமிழ்க்குமரன் டெல்லி சென்று காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். இதனால், அதிர்ச்சி அடைந்த ராமதாஸ், தமிழ்க்குமரனை பாமக-வில் இருந்து நீக்குவதாக கடந்த 29-ம் தேதி அறிவித்தார்.

காங்கிரஸ் கட்சியில் தமிழ்க்குமரன் இணைந்த போதே, அவருக்கு பென்னாகரம் தொகுதி ஒதுக்கப்படலாம் என்ற தகவல் வெளியானது. அதனை உறுதிப்படுத்தும் விதமாக, நேற்று வெளியான காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியலில் தமிழ்க்குமரனுக்கு பென்னாகரம் தொகுதி ஒதுக்கப்பட்டது. கட்சியில் இணைந்த ஒரே வாரத்துக்குள் தமிழ்க்குமரனுக்கு தொகுதி ஒதுக்கீடு செய்தது, காங்கிரஸ் கட்சியில் பெரும் விவாதப்பொருளாகியுள்ளது.

ராமதாஸ் ஆதரவாளராகவும், தற்போது பென்னாகரம் எம்எல்ஏ-வாகவும் இருக்கும் ஜி.கே.மணி, ராமதாஸே சொன்னாலும், இந்த முறை பென்னாகரம் தொகுதியில் மகனுக்கு எதிராக போட்டியிடப் போவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதேசமயம், தமிழ்க் குமரனை காங்கிரஸில் இணைத்து பென்னாகரம் தொகுதி வேட்பாளராக அறிவிக்கச் செய்ததில் திமுக-வின் பங்கு அதிகம் எனவும் அதன் பின்னணியில் ஜி.கே. மணி இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இதுதொடர்பாக பாமக தரப்பில் நம்மிடம் பேசியவர்கள், "பாமக அன்புமணியின் கட்டுப்பாட்டில் சென்று விட்டது. இனிமேல், ராமதாஸ் கூட இருந்தால் ஒன்றும் நடக்காது என்பது ஜி.கே.மணிக்கு தெரியும். ஏற்கெனவே, ஜி.கே. மணி திமுக-வுடன் நல்ல நட்புறவில் உள்ளார்.

தனது மகன் தமிழ்க்குமரனின் அரசியல் எதிர்காலத்தை கருதி, திமுக மூலமாக காங்கிரஸில் தனது மகனை சேர்த்து தனது பென்னாகரம் தொகுதி சீட்டையே வாங்கிவிட்டார். திரைப்பட தயாரிப்பாளர் சங்க தலைவராக தமிழ்க்குமரன் இருப்பதால், அந்த லைனில் இருக்கும் திமுக-வினரும் தமிழ்க்குமரனுக்கு சீட் கிடைக்க உதவி செய்துள்ளனர்.

பென்னாகரம் தொகுதியில் மகனை எதிர்த்து ஜி.கே. மணி போட்டியிடப்போவதில்லை. ராமதாஸும் பென்னாகரம் தொகுதிக்கு வேட்பாளரை அறிவிக்க வாய்ப்பு இல்லை" என்றனர்.

## சவுமியா அன்புமணியை எதிர்த்து போட்டியிட கூறியதால் வெளியேறினேன்- வேல்முருகன் எம்.எல்.ஏ. திடீர் குற்றச்சாட்டு

**சென்னை, ஏப்.05:**

தி.மு.க., கூட்டணியில் அங்கம் வகித்த தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவனர் வேல்முருகன் எம்.எல்.ஏ., நெய்வேலியில் போட்டியிட திட்டமிட்டார். ஆனால், 'சீட்' கிடைக்காத நிலையில், தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகிய தமிழக வாழ்வுரிமை கட்சி தனித்து போட்டியிட போவதாக அறிவித்தது.

அந்த கட்சிக்கு தேர்தல் ஆணையம் கேமரா சின்னம் ஒதுக்கியது. இந்நிலையில், பண்ருட்டியில் வேல்முருகன் போட்டியிட உள்ளதாகவும், இது தொடர்பான அறிவிப்பு ஏப்ரல் 3-ந்தேதி பண்ருட்டியில் நடைபெறும் செயல்வீரர்கள் கூட்டத்தில் வெளியாகும் என்று நிர்வாகிகள் கூறினர்.

இந்த நிலையில் நேற்று இரவு பண்ருட்டி தொகுதி வேட்பாளர் அறிமுக கூட்டம் தொகுதி செயலாளர் சுரேந்தர் தலைமையில் நடந்தது. தொகுதி பார்வையாளர் திருபுவனம் சக்கரவர்த்தி உள்ளிட்ட தொகுதி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்தில் த.வா.க. தலைவர் வேல்முருகன் பேசியதாவது:-



பண்ருட்டி தொகுதி எம்.எல்.ஏ.வாக போட்டியிட்ட போதேல்லாம் வெற்றி பெற்றுள்ளேன். பண்ருட்டி தொகுதி அரசு விழாக்களில் கூட தி.மு.க. 2-ம் கட்ட தலைவர்களை வைத்து பண்ருட்டியில் தி.மு.க.தான் போட்டியிட வேண்டும் என பேசினர். அமைச்சர் உள்ளிட்டோர் சிரித்து, ரசித்து வேடிக்கை பார்த்தனர். நான் எம்.எல்.ஏ.வாக இருந்த போதும் அரசு விழாக்களில் எனது பெயர் போடுவதில்லை. படம் போடுவதில்லை. நானும் வி.சி.க. தலைவர் திருமாவளவனும் சேர்ந்து வன்னியர், பறையர் சமுதாயத்தினர் ஒன்றுபட்டு வாழ முயற்சித்து வந்தேன். நான் நின்ற தொகுதியை வி.சி.க.வுக்கு ஒதுக்கி சண்டை மூட்ட தி.மு.க. நினைக்கிறது. எனக்கு இங்கு சீட் இல்லையாம். சவுமியா அன்புமணியை எதிர்த்து போட்டியிட வேண்டும் என்கின்றனர். நான் ஒத்துக்கொள்ளவில்லை. நான் பா.ம.க.வில் இருந்து வந்தவன் என்பதால் என்னை அக்கட்சியுடன் போட்டியிட தி.மு.க. அமைச்சர் ஒருவரே கூறுகிறார். அதனால் தான் நான் சீட் வேண்டாம். 10 அம்ச கோரிக்கை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தினேன். அதற்கு அரசு செவிசாய்க்கவில்லை. ஒரு சீட்டு, 2 சீட்டிற்காக மற்ற கட்சிகளிடம் நிற்க வேண்டியதில்லை. நம்முடன் 40 கட்சிகள் கூட்டணி வைத்துள்ளன. தமிழகம் முழுவதும் 234 தொகுதியில் போட்டியிட போகிறோம். நான் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செல்ல உள்ளேன். 5 ஆண்டு எனக்கு அவகாசம் கொடுங்கள்.

பண்ருட்டி தொகுதி வேட்பாளர் 24மணிநேரத்தில் கட்சி நிர்வாகிகளுடன் கலந்தாய்வு செய்து, அறிவிப்பேன். இவ்வாறு வேல்முருகன் எம்.எல்.ஏ. பேசினார்.

## நாட்டிலேயே மிகவும் பொறுப்பற்ற மாநில அரசு என்றால் அது தமிழ்நாடு அரசுதான்: பியூஷ் கோயல் கடும் குற்றச்சாட்டு

**சென்னை, ஏப்.05:**

மத்திய அமைச்சரும், தமிழக சட்டசபை தேர்தலுக்கான பா.ஜ.க. கட்சி மேலிட பொறுப்பாளருமான பியூஷ் கோயல் நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

* தமிழ்நாட்டின் கடன் ரூ. 10 லட்சம் கோடியை தாண்டியுள்ளது. கடன் சுமை அதிகரித்துக் கொண்டே செல்வதால் வெள்ளை அறிக்கை. பணம் எங்கே போச்சு முதல்வரே? நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு முதல்வரிடம் பதில் இல்லை. பொய்யான



பரப்புரைகளை முதல்வர் மேற்கொண்டு வருகிறார்.

* தமிழக அரசின் வருவாய் அதிகரிக்க GST-யும் ஒரு காரணம்.

* நாட்டிலேயே மிகவும் பொறுப்பற்ற மாநில அரசு என்றால் அது தமிழ்நாடு மாநில அரசுதான்.

* அரசின் கஜானாவை முதல்வரின் குடும்பம் ஏ.டி.எம். ஆக பயன்படுத்தி வருகிறது.

* அரசு ஊழியர்களின் பணப்பலன்களை முதல்வர் குடும்பம் அபகரித்துள்ளது. அரசு ஊழியர்கள் பணப்பலன் மட்டுமின்றி மது விற்பனை, அரசு ஒப்பந்த பணிகள் என அனைத்திரும் கமிஷன் அடிக்கிறது திமுக.

* ஊழல் செய்யும் திமுக அரசு எந்த விதத்திலும் மீண்டும் ஆட்சிக்கு வந்து விடக்கூடாது.

* 12 லட்சம் கோடி ரூபாய் முதலீடு கிடைத்துள்ளது என்கிறது திமுக அரசு. அந்த முதலீடுகள் எங்கே?

இவ்வாறு பியூஷ் கோயல் பேசினார்.

## வாழப்பாடி அருகே இளம்பெண் தற்கொலை: கணவர் குடும்பத்தினரிடம் போலீசார் அதிரடி விசாரணை

**சேலம், ஏப்.05:**

வாழப்பாடி அடுத்த பேளூரை சேர்ந்தவர் கார்த்திகேயன் (வயது 25). இவர் அதே பகுதியில் இ-சேவை மையம் நடத்தி வருகிறார். இவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு சினேகா (22) என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதிக்கு யாசினி (2) என்கின்ற ஒரு பெண் குழந்தை உள்ளது.

இந்நிலையில் நேற்று பகல் 3 மணி அளவில் வீட்டில் இளம்பெண் சினேகா திடீரென தூக்கில் தொங்கினார். அவரை மீட்ட உறவினர்கள் மருத்துவமனைக்கு கொண்டு சென்று பரிசோதித்த போது



அவர் ஏற்கனவே இறந்து போனது தெரியவந்தது.

இது குறித்து தகவலறிந்த வாழப்பாடி போலீஸ் இன்ஸ்பெக்டர் வேல்முருகன் தலைமையிலான போலீசார் தற்கொலை செய்து கொண்ட இளம்பெண் சினேகா உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

திருமணமான 4 ஆண்டுகளுக்குள் இளம்பெண் தற்கொலை செய்து கொண்டதால் இதுகுறித்து சேலம் ஆர்.டி.ஓ. மற்றும் வாழப்பாடி துணை போலீஸ் சூப்பிரண்டு விசாரணைக்கு வாழப்பாடி போலீசார் பரிந்துரை செய்துள்ளனர்.

இதனை தொடர்ந்து ஆர்.டி.ஓ. மற்றும் துணை போலீஸ் சூப்பிரண்டு ஆகியோர் கார்த்தியேன் குடும்பத்தினரிடம், சினேகா குடும்பத்தினரிடமும் சினேகா இறந்த காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## "எதிர்க்கட்சி அந்தஸ்து கூட கிடைப்பது சந்தேகம்" அதிமுகவை வாரும் பிரேமலதா

**சென்னை, ஏப்.05:**

"எதிர்க்கட்சி அந்தஸ்து கூட அதிமுக-வுக்கு கிடைப்பது சந்தேகம்" என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

அம்பத்தூர் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அ.பு.பூர்ணிமாவை ஆதரித்து பிரேமலதா விஜயகாந்த், பாடியில் நேற்று பிரச்சாரம் செய்தார்.



அப்போது அவர் பேசியதாவது: இன்றைய சூழலில் அரசியலுக்கு பெண்கள் வருவதே மிகவும் கடினம். அந்த வகையில், இன்றைக்கு ஒரு பெண் வேட்பாளரான பூர்ணிமாவுக்காக நான் பிரச்சாரம் செய்வதை நினைத்து உண்மையிலேயே ஒரு பெண்ணாக மிக மிக சந்தோஷப்படுகிறேன்.


பெண்கள் தான் இந்த நாட்டின் கண்கள் என மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த் அடிக்கடி சொல்வார். அதற்கேற்ப பெண்களுக்கான அதிகமான வாக்குறுதிகளை, தேர்தல் அறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடுத்திருக்கிறார்.

எதிர்கட்சித் தலைவர் ஃபிரிட்ஜ் தருவதாக சொல்லியிருக்கிறார். ஆனால், இன்றைக்கு அனைவரது வீட்டிலும் ஃபிரிட்ஜ் இருக்கிறது. அதேசமயம் திமுக வழங்கும் ரூ.8 ஆயிரம் மதிப்புள்ள கூப்பனை பயன்படுத்தி உங்களுக்கு வேண்டிய பொருளை வாங்கிக் கொள்ளலாம். அதேபோல் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்வு, உயர்கல்வி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி என ஏராளமான திட்டங்களை திமுக அறிவித்துள்ளது.

கடந்த திமுக ஆட்சியில் அம்பத்தூர் தொகுதியில் மொத்தமாக ரூ.880 கோடியில் சாலை பணிகள், பாடி குப்பம் ரயில் நிலையம் மேம்பாலம், மழைநீர் வடிகால், விளையாட்டு திடல், பூங்காக்கள் என பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த தேர்தலில் எத்தனை முனை போட்டி நிலவினாலும் எதிரில் இருப்பவர்களுக்கு கூடத் தெரியும், தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்று.

அதிமுக-வுக்கு எதிர்கட்சி அந்தஸ்து கூட கிடைக்குமா என்பது சந்தேகம். மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி, மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் ஆசியுடன் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, தமிழகத்தில் 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வென்று ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் பேசினார்.இதேபோல் தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசனை ஆதரித்து பல்லாவரத்திலும் நேற்று பிரேமலதா பிரச்சாரம் மேற்கொண்டார்.

## வெள்ளி சிம்மாசனத்தில் அன்னை மீனாட்சி, அருள்மிகு சொக்கநாதர் பெருமான்



**மதுரை, ஏப்.05:**

மதுரை-அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் 04.04.2026-திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கல்யாணத்தை முன்னிட்டு அன்னை மீனாட்சி, அருள்மிகு சொக்கநாதர் பெருமான் வெள்ளி சிம்மாசனத்தில் திருப்பரங்குன்றம் எழுந்தருளல்

சேல்பட்டழிந்தது செந்தூர்
வயற் பொழில் தேங்கடம்பின்
மால் பட்டழிந்தது பூங்கொடி
யார் மனம் மாமயிலோன்
வேல் பட்டழிந்தது வேலையுஞ்
சூரனும் வெற்பும் அவன்
கால் பட்டழிந்ததிங்கு என்தலை
மேல் அயன் கையெழுத்தே-
கந்தர் அலங்காரம்

சொக்கே நின் தாளேதுணை

## வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் செந்தில்குமார் வேட்பு மனுவை தாக்கல்



**திருப்பத்தூர், ஏப்.05:**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் செந்தில்குமார் அதிமுக தேர்தல் அலுவலகத்தில் 1000 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்களுடன் ஊர்வலமாக சென்று வாணியம்பாடி கோட்டாட்சியர் அலுவலகத்தில் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் அஜிதாபேகத்திடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அப்போது முன்னாள் எம் எல் ஏ கோ வி சம்பத்குமார், கழக மருத்துவர் மாநில இணை செயலாளர் டாக்டர் பசுபதி,நகர கழக செயலாளர் சதாசிவம், நாட்றம்பள்ளி ஒன்றிய கழக செயலாளர் சாம்ராஜ் உதயேந்திரம் பேரூராட்சி கழக செயலாளர் சரவணன் மற்றும் பாஜக பாமக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## இந்திய முஸ்லிம் லீக் வேட்பாளர் SSB.சையத் பாரூக் அவர்களுக்கு ஏணி சின்னத்தில் வாக்கு சேகரிப்பு



**திருப்பத்தூர், ஏப்.05:**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி,மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, இந்திய முஸ்லிம் லீக் வேட்பாளர் SSB.சையத் பாரூக் அவர்களுக்கு ஏணி சின்னத்தில் வாக்களிக்குமாறு வாணியம்பாடி நகரில் உள்ள முக்கிய பள்ளிவாசல்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், இந்திய முஸ்லிம் லீக் மாநில துணைத் தலைவர் அப்துல் ரகுமான் ex.MP வாணியம்பாடி நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் V.S.சாரதி குமார் BE.,MC வாக்கு சேகரித்தனர். நிகழ்வில் மாவட்ட தலைவர் ஜனாப் S.T. நிசார் கூட்டணி கட்சி நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## மகாராஷ்டிராவில் கோர விபத்து கிணற்றில் கார் பாய்ந்து குழந்தைகள் உள்பட 9 பேர் பலி

**மும்பை, ஏப்.05:**

மகாராஷ்டிரா மாநிலம் திண்டோரி தாலுக்காவில் உள்ள இந்தூர் கிராமத்தை சேர்ந்தவர் சுனில் தத்தாத்ரேய தர்கோடே (34). இவர் தனது மனைவி ரேஷ்மா (30) மகள் ராக்கி (10) மற்றும் உறவினர்கள் ஆஷா அனில் தர்கோடே (32), மாதுரி (13), ஸ்ராவணி (11), ஸ்ரேயாஷ் (11), ஸ்ரிஷ்டி (14) சம்ருத்தி (7) ஆகியோருடன் ஒரே காரில் சிவாஜிநகரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு, அவர் காரில் தனது குடும்பத்துடன்



நள்ளிரவில் வீட்டிற்கு திரும்பி சென்று கொண்டிருந்தார். நாசிக் அருகே உள்ள திண்டோரி பகுதியில் சென்ற போது சுனில் ஓட்டி வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் இருந்து விலகி, அருகில் தண்ணீர் நிரம்பியிருந்த ஒரு கிணற்றில் விழுந்தது. இதில் காரில் இருந்த அனைவரும் தண்ணீரில் மூழ்கினர்.

WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

THE BEST CENTRE OF CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும் தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

# கவிதை அரங்கம்!




தாமதித்து
தவிக்கவிடாதே
தாங்காது
இதயம்

எனக்காக
நீயிருக்கின்றாய்
என்ற உணர்வே
வாழ்க்கையை அழகாக்கி
கொண்டிருக்கின்றது
ஒவ்வொரு நொடியும்

காத்திருந்த
கனமான நிமிடமெல்லாம்
காணாமல் போனது
கண்கள் உனைக்காண

விலகாத அணைப்பு
மௌனங்கள் பேசும்
காதல் கரைகின்ற இரவில்
தொடர்ந்திட வேண்டும்

# வாழ்க்கை தத்துவம்...



வாழ்க்கையில் எவ்வளவு
கஷ்டங்கள் வந்தாலும்
உனக்கான நேரத்தை
வாழ மறந்துவிடாதீர்கள்

இதயத்தை கவர்ந்து
விட்டால் எது சொல்லியும்
புரிய வைக்கலாம்

பெரும்பாலும் முதல்
சிந்தனை தெளிவற்றதாக
இருக்கும் எதற்கும் மறு
சிந்தனை செய்யுங்கள்

பதிலை மட்டுமே தேடி தேடி
கேள்வியை மறந்து விடாதீர்கள்

இன்பத்திலும் சரி
துன்பத்திலும் சரி
சகிப்புத்தன்மை
இருந்தால் வாழ்க்கை
அழகாய் இருக்கும்

# விருது !

" ஹல்லோ...கிருத்திகா ! கங்கி ராடஸ்..இந்த வருஷம் பெஸ்ட் ஆக்ட்ரஸ் அவார்ட் வாங்கினதுக்கு ! .." சீனியர் ஆர்டிஸ்ட் வாழ்த்தினார்.

" தேங்க் யு ஆன்டி "

" ஆமாம்..உன் ஹஸ்பண்ட் வரல்லியா ? " முகம் சுருங்கியவள் , " இல்ல ஆன்டி ! ஆபீஸ்ல போர்டு மீட்டிங். அதனால் வரல்ல.." கொஞ் சம் வருத்தத்துடன் கூறினாள் கிருத் திகா.

இன்னும் எத்தனையோ பேர்கள் நடிகை கிருத்திகாவிடம் வந்து கை குலுக்கி வாழ்த்துச் சொன்ன வண்ணம் இருந்தனர்.

சில முன்னணி நட்த்திரங்கள், இயக்கு னர்கள்கள் கிருத்திகாவுக்கு வாழ்த்து சொன்னார்கள். அரங்கம் நிரம்பி வழிந்தது. ஃபோட்டோஃபிளாஷ்கள் , வீடியோ காமிராக்கள்சுழன்றவண் ணம் இருந்தன !

தன் உதவியாளனிடம் தன் ஸ்மார்ட் ஃபோனைக் கொடுத்து படம் பிடிக்கச் சொல்ல, அவனும் மிக அநாயசமாக காட்சிகளை வீடியோ எடுத்துக்கொண் டிருந்தான். மகிழ்ச்சியில் முகம் பூராக வும் சிரிப்புடனும் ஒருவித படபடப்பு டனோடும் காணப்பட்டாள் கிருத்திகா. கிடைத்த ஷீல்டையும், பூமாலைக ளையும் அள்ளிக்கொண்டு தன் உதவியாளனுடன்புறப்பட்டாள்.

வீட்டை அடைந்தவள் ஏற்கனவே தன் கணவர் ஆஃபீஸிலிருந்து வந்திருப்ப தைக் கண்டு சந்தோஷத்துடன் ஷீல்டை எடுத்துக் கொண்டு அவரரு கில் சென்றாள். பின்னாடி ஓடிவந்த உதவியாளன் பூமாலைகளையும் ஸ்மார்ட் ஃபோனையும் கிருத்தி காவிடம் கொடுத்துவிட்டுஅங்கிருந்து அகன்றான்.

மனைவியை குறு குறுவென்று பார்த்த ராம்குமார் , " விழா நல்லா நடந்ததா கிருத்தி ? "

" ம்.. நீங்கள்தான் வரல்ல... எவ்வளவு கிராண்டா நடந்தது தெரியுமா? எத்தனை ஆர்டிஸ்டுகள் , டைரக் டர்கள்..வந்து வாழ்த்துசொன்னாங்க. இதோ பாருங்க ஷீல்டு..என் மொபை ல்ல ஷூட் பண்ண வீடியோவ பாரு ங்க.." ஃபோனை ஆன் செய்து காண் பிக்க, ராம்குமார் எந்தவித சலனமும் இல்லாமல் பார்த்தார்.

பிறகு சோஃபாவில் அமர்ந்து கொண்டார்.

" கிருத்தி ! உன்னைப் பத்தி எனக்கு நல்லாவேத் தெரியும். நீ அருமையான ஆர்டிஸ்ட். தமிழ் திரையுலகுக்கு கிடை த்த பொக்கிஷம் ! "

கணவரின் புகழ் வார்த்தையில் அப்படியே உருகிப் போய் நின்றாள்.

ராம்குமார் தொடர்ந்தார். " நீ விருது வாங்கின திரைப்படத்த நானும் பார்த்தேன்.அம்மா ரோல், மகள் ரோல் என்று இரட்டை வேடம். அம்மா கேரக் டரை வெகு அற்புதமாகச் செய்திரு க்கே ! உன் நடிப்பைப் பார்த்து எத்த னைக் கைத்தட்டல்கள்! ரியலி சூப்ப ர்ப் ! உன்னை நினைச்சுபெருமைப்பட றேன் டார்லிங் ! ".

கணவரின் பேச்சில் மயங்கியவள் , " ஆடிட்டோரியத்தில் கிடைத்ததைவிட உங்கள் வாழ்த்துதான் எனக்கு பெரி சாய் தெரியறது ! ரொம்ட நன்றிங்க ! " என்றாள் கிருத்திகா பெருமையால் நெஞ்சம் விம்மிட !

அவளைக் கடைக்கண்ணால் பார்த்தபடி தொடர்ந்தார் ராம்குமார்.

" ஆனால், கிருத்தி...நீ இந்த விருது வாங்க முழுத்தகுதி உடையவளா? நல்லா யோசிச்சுப் பாரு ! "

கிருத்திகா திடுக்கிட்டாள். " என்ன சொல்றீங்க ?" படபடத்தாள் !

" யெஸ் மை டியர் ! இதுவரை இருபது படங்கள்ல நடிச்சிருக்கே. ஆனால் ஒரு படத்தில்கூட உன் சொந்தக்குரல்ல நீ பேசினதில்ல. டப்பிங் ஆர்டிஸ்ட் குரல் தான் ! உன் முக உணர்ச்சிகளு க்கேற்ப அந்தக் குரலில் காணப்பட்ட மிகச் சரியான ஏற்ற இறக்கங்கள். அவற்றைக் கொண்டு உன் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியி ருக்கே.இல்லையென்றால் உன் நடிப்பு சோபிக்குமா ! ஸோஎன்னைப் பொறுத்தவரை இந்த விருதில் சரிபாதி டப்பிங் ஆர்டி ஸ்ட்டுக்குப் போய்ச் சேரணும். அது தான் நியாயமானதும்கூட ! ஆனால் அதை நீ மட்டும் செயல்படுத்த முடி யாது. தார்மீக உணர்வு கொண்டு இந்த விருதை ஏற்றுக்கொள்வதும், இல்லை ஏற்றுக் கொள்ளாததும் உன்னிஷ்டம் ! " எனக் கூறிவிட்டு எழுந்து சென்றார் ராம்குமார்.

பிரமை பிடித்தவள் நின்றுகொண்டி ருந்த கிருத்திகா மனத்தில் இருந்த கர்வம் கொஞ்சம் கொஞ்மாக கழன்றுகொண்டிருந்தது !



வி.கே. லக்ஷ்மிநாராயணன்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*மனைவி:* ஏங்க, கல்யாணத்துக்கு முன்னாடி எனக்கு நிறைய கிப்ட் கொடுத்தீங்களே, இப்போ ஏன் கொடுக்கறது இல்ல?

*கணவன்:* நீ எங்கயாவது பார்த்திருக்கியாமா... மீன் பிடிச்சதுக்கு அப்புறம் எந்த மீனவாவது புழுவை போடுவாங்களா?



# தினம் ஒரு சமையல்



## நாட்டுக்கோழி வறுவல்

**தேவையான பொருட்கள்:**

*800 கிராம் - நாட்டுக்கோழி*
*300 கிராம் - சின்ன வெங்காயம்*
*இரண்டு - ஸ்பூன் இஞ்சி பூண்டு விழுது*
*ஐந்து - காய்ந்த மிளகாய்*
*நான்கு - ஸ்பூன் கரம் மசாலா*
*ஒரு ஸ்பூன் - மிளகுத்தூள்*
*தேவையான அளவு - கொத்தமல்லி இலைகள்*
*இரண்டு கொத்து - கருவேப்பிலை*
*ஐந்து ஸ்பூன் - நல்லெண்ணெய்*

**செய்முறை:**



நாட்டு கோழியை சுத்தம் செய்து சுடு தண்ணீரில் மஞ்சள் சேர்த்து கழுவி அதனுடன் காய்ந்த மிளகாய் கால் ஸ்பூன் இஞ்சி பூண்டு விழுது கால் ஸ்பூன் மஞ்சள் தூள் உப்பு சேர்த்து வேக விடவும்.

இஞ்சி மற்றும் பூண்டை இடி கல்லில் வைத்து நன்கு இடித்து அதனை பேஸ்ட்டாக அரைத்துக் கொள்ளவும்


ஒரு வாணலியில் சிறிதளவு நல்லெண்ணெய் சேர்த்து சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கி வெங்காயம் நன்கு வதங்கியவுடன் அதில் கரம் மசாலாத்தூள் சேர்த்து நன்கு பிரட்டி எடுக்கவும். நன்கு ஆரிய பிறகு பேஸ்ட்டாக அரைத்துக் கொள்ளவும்.

மற்றொரு வாணலியை அடுப்பில் வைத்து அதில் மூன்று ஸ்பூன் நல்லெண்ணெய் கடுகு கருவேப்பிலை காய்ந்த மிளகாய் மற்றும் சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கவும். இதனுடன் இஞ்சி பூண்டு விழுது மற்றும் வேக வைத்த நாட்டு கோழியை சேர்த்து வதக்கவும்.

கோழி வெங்காயம் உடன் சேர்ந்து நன்கு கலந்த பிறகு அரைத்து மசாலா கலவையை சேர்த்து பிரட்டவும். கோழி வேக வைத்த தண்ணீரை சேர்த்து நன்கு வேக விடவும்.

கோழி நன்கு வெந்து தண்ணீர் வற்றியவுடன் மிளகுத்தூள் சேர்த்து தேவையான அளவு கொத்தமல்லி சேர்த்து நன்கு கலந்து ஒரு நிமிடம் வேக வைத்து எடுத்தால் அருமையான சுவையான என் குடும்பத்தாருக்கு மிகவும் பிடித்த நாட்டுக்கோழி வறுவல் தயார்

# வெற்றிலை பயன்கள்



வெற்றிலை செரிமானத்தை மேம்படுத்துதல், சளி/ இருமல் நிவாரணம், வாய் துர்நாற்றத்தை நீக்குதல், வலி நிவாரணம் மற்றும் வாய் ஆரோக்கியம் போன்ற பல மருத்துவ நன்மைகளைக் கொண்டுள்ளது. ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் நிறைந்த இது, கொழுந்து வெற்றிலையை அரைத்து பற்று போடுவதன் மூலம் வீக்கம் மற்றும் வலியை குறைக்க உதவுகிறது.

வெற்றிலையின் முக்கிய மருத்துவ பயன்கள்:

செரிமானம் மற்றும் வயிறு: சாப்பிட்ட பின் வெற்றிலை மெல்லுவது செரிமானத்தை தூண்டுகிறது, மலச்சிக்கலை போக்குகிறது மற்றும் வயிற்று வலியிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

சளி மற்றும் இருமல் நிவாரணம்: வெற்றிலைச்சாறு, தேன் கலந்து சாப்பிடுவது நெஞ்சு சளி, இருமல் மற்றும் தொண்டை கரகரப்பை குணமாக்க உதவுகிறது. வெற்றிலையை வெதுவெதுப்பாக்கி மார்பில் கட்டுவது குழந்தைகளின் சளிக்கு நல்லது.

வலி மற்றும் வீக்கம் குறைத்தல்: கொழுந்து வெற்றிலையை அரைத்து, வீக்கம் உள்ள இடங்களில் பற்று போடலாம். இது மூட்டு வலி மற்றும் வீக்கத்தை (கீழ்வாதம்) குறைக்க உதவுகிறது.

வாய் சுகாதாரம்: வெற்றிலை வாய் துர்நாற்றத்தை நீக்கி, வாய் புண்களை ஆற்றுகிறது. கிருமி நாசினியாக செயல்பட்டு பல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

தலைவலி மற்றும் மனஅழுத்தம்: வெற்றிலை சாற்றை நெற்றியில் தடவினால் தலைவலி குறையும். இது நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி மனஅழுத்தத்தை குறைக்க உதவுகிறது.

# சினிமா

## சிம்புவுடன் கைகோர்க்கும் மூன்று முன்னணி கதாநாயகிகள்.. GOD OF LOVE லேட்டஸ்ட் அப்டேட்




கடந்த ஆண்டு டிராகன் எங்கும் மாபெரும் வெற்றிப்படத்தை கொடுத்துவிட்டு, தற்போது God Of Love திரைப்படத்திற்கான முன் தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

பிரம்மாண்டமாக உருவாகும் இப்படத்தை ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தின் டைட்டில் லுக் போஸ்டர் ஏற்கனவே வெளிவந்த நிலையில், படப்பிடிப்பு எப்போது தொடங்கும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

இப்படத்தில் நடிகர் சந்தானம் பல ஆண்டுகளுக்கு பின் சிம்புவுடன் இணைந்து நடிக்கிறார். இதனை இப்படத்தின் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து உறுதி செய்துள்ளார்.

இந்த நிலையில், இப்படத்தில் மூன்று முன்னணி கதாநாயகிகள் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதில் நடிகை மீனாட்சி சவுத்ரி நடிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.


மேலும், ருக்மிணி வசந்த் மற்றும் மிருணாள் தாகூர் ஆகிய இருவருடனும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க பேச்சு வார்த்தை நடந்து வருகிறதாம். விரைவில் படக்குழுவிடம் இருந்து இதற்கான அறிவிப்பு வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



நந்திதா படங்கள், வெப் சீரிஸ் என நடித்து வருகிறார். நந்திதா சமீப காலமாக தாராள கவர்ச்சி காட்டவும் தொடங்கி இருக்கிறார்.

அவர் சேலையில் செம ஹாட் போஸ் கொடுத்த ஸ்டில்களை பாருங்க.

## 14 நாட்களில் துரந்தர் 2 உலகளவில் செய்துள்ள வசூல்... எவ்வளவு தெரியுமா



நடிகர் ரன்வீர் சிங் – இயக்குநர் ஆதித்யா தார் கூட்டணியில் உருவாகி சமீபத்தில் வெளிவந்து மாபெரும் வெற்றிபெற்றுள்ள படம் துரந்தர் 2.

இப்படத்தின் முதல் பாகம் கடந்த ஆண்டு வெளிவந்து வெற்றிபெற்றதை தொடர்ந்து பெரிதும் எதிர்பார்ப்புடன் துரந்தர் 2 வெளியானது. இப்படத்தில் ரன்வீர் சிங் உடன் இணைந்து சாரா அர்ஜுன், மாதவன், அர்ஜுன் ராம்பால் என பலரும் நடித்திருந்தார். இப்படத்திற்கு சாஷ்வாட் சச்தேவ் இசையமைத்திருந்தார்.

துரந்தர் 2 திரைப்படத்தின் வசூல் குறித்து தொடர்ந்து பார்த்து வருகிறோம். 7 நாட்களில் ரூ. 1000 கோடி பாக்ஸ் ஆபிஸ் கிளப்பில் இப்படம் இணைந்தது. இந்திய சினிமாவில் ரூ. 1000 கோடி வசூல் செய்த 10வது திரைப்படம் என்கிற சாதனையை படைத்துள்ளது.

இந்த நிலையில், 14 நாட்களை பாக்ஸ் ஆபிஸில் கடந்துள்ள துரந்தர் 2 இதுவரை உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, 14 நாட்களில் உலகளவில் துரந்தர் 2 ரூ. 1475 கோடிக்கும் மேல் வசூலித்துள்ளது.

# ஸ்ரீ ராமநவமி தோன்றிய புராண வரலாறு

ராமநவமி

'கலியுகத்தில் கடுமையான விரதங்களோ பூஜைகளோ செய்துதான் புண்ணியபலன்களை அடையவேண்டும் என்பது அவசியமில்லை. அன்புடன் பகவானின் திருநாமத்தினைச் சிந்தித்தாலே போதும்' என்பது எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவாக்கு. அத்தகு நாமஜெபத்தில் மிகவும் உயர்ந்தது ஸ்ரீராமநாம ஜெபம்.

ராமநவமி

ஸ்ரீராமபிரான் சித்திரை சுக்லபட்ச நவமியன்று புனர்பூச நட்சத்திரம் நான்காவது பாதத்தில் அவதரித்தவர். இதையொட்டி ஸ்ரீராமநவமி எனப்படும் ஸ்ரீராமஜென்மோத்சவமானது நமது தேசம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

ராமநவமி - தோன்றிய புராணவரலாறு..!

பொதுவாக ஒரு மாதத்திற்கு இரண்டு பட்சங்கள். ஒரு பட்சம் என்பது பதினைந்து திதிகளைக் கொண்டது என்பது அனைவரும் அறிந்ததே. இவற்றுள் ஒவ்வொரு திதியும் ஒவ்வொரு கடவுளுக்கு உகந்ததாகப் போற்றப்படுகின்றன அல்லவா..?! அதேபோல் இன்னின்ன காரியங்களுக்கு இன்னின்ன திதிகள் உரியவை என்ற சிறப்புடன் எல்லா திதிகளும் மகிழ்ந்திருந்தன. ஆனால் சுபகாரியங்களுக்கு ஆகாத திதிகள் என அஷ்டமி மற்றும் நவமி ஆகிய இரண்டையும் மக்கள் ஒதுக்குவதை நினைத்து கண்ணீர் விட்ட அத்திதி தேவதைகள் திருமாலிடம் சென்று தங்கள் மனக்கேதத்தினைச் சொல்லி முறையிட்டனவாம்.

அதற்கு பகவானும், "கவலைப்படாதீர்கள், உங்கள் இருவரையும் மக்கள் கொண்டாடுமாறு செய்கிறேன்" என்று சமாதானம் செய்தருளினாராம். அதன்படி, இராம அவதாரத்தினை நவமியிலும்; கிருஷ்ண அவதாரத்தினை அஷ்டமியிலும் நிகழ்த்தி தாம் சொன்ன வாக்கினை நிறைவேற்றினாராம். இதனாலேயே ஸ்ரீ ராமநவமி மற்றும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி ஆகிய இரண்டையும் மக்கள் சிறப்பாகப் பூஜிக்கின்றார்கள் என்கின்றன புராண நூல்கள்.

ராமபிரான் லீலைகள்



ராமபிரான் லீலைகள் ராமநவமி - விரதமிருந்தால் இவ்வளவு பலன்களா..?

ஒரு சமயம் கேசவ பட்டர் என்கிற ஏழை அந்தணர் தேசயாத்திரை புறப்பட்டார். செல்கிற வழியில் வியாசர், பராசரர், சுகி ஆகிய மூன்று தவ முனிவர்களைக் கண்டு வணங்கியவர் தன் ஏழ்மை நிலையினைச் சொல்லி வருத்தத்துடன் முறையிட்டார்.

அவர்களோ ஸ்ரீ ராமநவமி விரதத்தினை முறையாக உபதேசித்ததுடன் ராமாயண உபன்யாசம் செய்வதாலும் கேட்பதாலும் கிடைக்கிற அளப்பரிய பலன்களையும் சொன்னார்கள். இப்படியாக இராம நவமி விரதத்தினை முறையாக மேற்கொண்டால் திருமகள் கடாட்சம் கிடைக்கும்; பகைவர்கள் கூட நண்பர்களாக மாறி விடுவர்; வியாதிகள் தொலையும்; இழந்தவற்றை மீண்டும் அடையலாம்; உத்தமமான குழந்தைகள் மூலம் சந்ததி விருத்தி உண்டாகும் என்கிற பலன்களை மூன்று முனிபுங்கவர்கள் மூலமாகவும் அறிந்த கேசவபட்டர் அவர்களை மகிழ்வுடன் வணங்கி சொந்த ஊர் திரும்பினார். இராமநவமி விரதமகிமையால் சகல ஐஸ்வர்யங்களையும் அடைந்த அவர் பலருக்கும் இவ்விரத மகிமையை உபதேசித்தார். இதன் பலனாக அவரின் மகனான நாராயணன் பட்டத்து யானை மாலையைப் போட்டதன் மூலம் அந்நாட்டிற்கே அரசன் ஆனான். அந்நாடே சுபிட்சமாக விளங்கியது.




விரதங்களில் எளிமையானது இது மட்டும்தான்..!

நமது சமயவியல் வாழ்வில் ஏராளமான விரதபூஜைகள் நம்மால் கடைப்பிடிக்கப் படுகின்றன. ஆனால் மிக எளிமையானதும்; அதேசமயத்தில் உயர்ந்த பலன்களைத் தரவல்லதுமான விரதம் ஸ்ரீராமநவமி ஒன்றே..!

ஸ்ரீ ராமபிரான் அவதரித்தது நல்ல கோடைக் காலம். குருகுல வாசத்தின்போதும்; வனவாசத்தின் போதும் வெயிலில் பாதுகைகள் இன்றி நடந்தவர் அப்பெருமான். தவிர இராமர் பிறந்த அன்று அவரது தந்தையான தசரதச் சக்கரவர்த்தி அயோத்தி முழுவதும் பானகம் மற்றும் நீர்மோருடன் விசிறியும் அளித்து தமது மகிழ்ச்சியைக் கொண்டாடினாராம்.

இதனாலேயே ஸ்ரீராமநவமியன்று எலுமிச்சை மற்றும் வெல்லம் சேர்த்த பானகமும்; தாளித்த நீர்மோரும் நிவேதிக்கப்படுதல் மரபாக உள்ளது.

பெருமாள்

பெருமாள் ஸ்ரீராமநவமி விரதம் - நினைவில் கொள்ள வேண்டியவை..! சித்திரை மாதத்தில் முதல் திதியான பிரதமை துவங்கி நவமி வரை ஒன்பது தினங்கள் விரதம் நோற்று ராமாயணத்தினை பாராயணம் செய்வது ஒரு முறை. இதில் பத்தாவது நாளாகிய தசமி திதியன்று இராமர் பட்டாபிஷேக படலத்தினைப் பக்தியுடன் வாசித்து பூர்த்தி செய்வது வழக்கம். ஸ்ரீஇராமநவமி அன்றைய ஒரு தினம் மட்டும் விரதமிருந்து பூஜை செய்வது பெரும்பாலானோர் வழக்கம்.

ஸ்ரீராமர் பட்டாபிஷேக படத்தினையோ அல்லது விக்கிரகங்களையோ அலங்கரித்து

அர்ச்சிக்கலாம். அல்லது ஸ்ரீராமாயணம் புத்தகத்தினை வைத்தும் பூஜிக்கலாம். மனைப்பலகையில் கோலமிட்டு ஸ்ரீ ராமஜெயம் என்று அரிசிமாவினால் எழுதி, அதற்கு சந்தன குங்கமத் திலகமிட்டு, பூக்கள் தூவி வழிபடுவது வழக்கம். ராமநாமத்தினைச் சொல்லி தாமரை மலர்களால் பூஜிப்பது அதிக விசேஷம். எளிமையான துளசிதளங்களைக் கொண்டு அர்ச்சிப்பதும் சிறப்பு.

இராமர் ஜனித்தது நடுப்பகலில் என்பதால் இப்பூஜையினை பகல்நேரத்தில் செய்வதுதான் சம்பிரதாயம்.

அன்னம், பாயசம், வடைபருப்பு, கனிவகைகள், தேங்காய், வெற்றிலை முதலியவற்றுடன் இயன்ற நிவேதனங்களை சமர்ப்பிப்பது வழக்கம். முக்கியமாக பானகமும்; நீர்மோரும் இடம்பெறுதல் அவசியம். பானகம் மற்றும் நீர்மோர் இவற்றை பூஜை முடிந்தபின் பிரசாதமாக அனைவருக்கும் விநியோகிக்க வேண்டும். குடை, விசிறி அல்லது செருப்பு போன்றவைகளில் இயன்றவற்றை தானம் செய்வது விசேஷம்.

ராம நாம மகிமை

ராம நாம மகிமை அன்றைய தினம் முழுமையும் ஸ்ரீராமநாமத்தினைச் சிந்தித்தபடியே இருத்தல் அவசியம்.

அரண்மனை சுகபோகத்தில் பிறந்தாலும் எளிவந்த பிரானாக அவதானித்துக் காட்டியவர் ராமபிரான். அப்பெருமானின் நாமத்தினை சிந்தித்து அதே எளிமையான நற்குணங்களுடன் வாழ நாமும் பிரார்த்திக்கலாமே..!

BALACHANDAR

# தினம் ஒரு தலைவர்கள்

# சரத் சந்திர போஸ் வரலாறு

சரத் சந்திர போஸ் செப்டம்பர் 6, 1889 அன்று ஒடிசாவின் கட்டாக்கில் ஜானகிநாத் போஸ் (தந்தை) மற்றும் பிரபாபதி தேவிக்கு பிறந்தார்.

இந்தக் குடும்பம் முதலில் மேற்கு வங்காளத்தின் தெற்கு 24 பர்கானாஸ் பகுதியில் உள்ள கோடாலியாவை (இப்போது சுபாஷ்கிராம்) பூர்வீகமாகக் கொண்டது . அவர் குலின் கயஸ்தா குடும்பத்தைச் சேர்ந்தவர் . அவரது தந்தை மஹிநகர் ( தெற்கு 24 பர்கானாஸ் ) போஸ் வம்சாவளியைச் சேர்ந்தவர், அதே நேரத்தில் அவரது தாயார் பிரபாபதி தேவி வடக்கு கொல்கத்தாவில் உள்ள ஹட்கோலாவின் பிரபலமான தத்தா குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் பதினான்கு குழந்தைகள், ஆறு மகள்கள் மற்றும் எட்டு மகன்களைப் பெற்றெடுத்தார், அவர்களில் இடதுசாரித் தலைவர் சரத் சந்திர போஸ், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மற்றும் புகழ்பெற்ற இருதயநோய் நிபுணர் டாக்டர் சுனில் சந்திர போஸ் ஆகியோர் அடங்குவர்.


சரத்துக்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருந்தனர். அவர்கள் பிரமிளாபாலா மித்ரா மற்றும் சரலாபாலா டே. அவருக்கு சதீஷ் சந்திர போஸ் (1887 - 1948) என்ற மூத்த சகோதரர் இருந்தார். அவருக்கு ஆறு இளைய சகோதரர்கள் இருந்தனர், அதாவது: சுரேஷ் சந்திர போஸ் (1891 -1972), சுதிர் சந்திர போஸ் (1892 - 10 பிப்ரவரி 1950), டாக்டர் சுனில் சந்திர போஸ் (1894 - 17 நவம்பர் 1953), சுபாஷ் சந்திர போஸ் (23 ஜனவரி 1897 -18 செப்டம்பர் 1985), சைலேஷ் சந்திர போஸ் (1904 -1984) மற்றும் சந்தோஷ் சந்திர போஸ். அவருக்கு நான்கு இளைய சகோதரிகள் இருந்தனர், அவர்கள் தருபாலா ராய், மாலினா தத்தா, பிரதிபா மித்ரா மற்றும் கனகலதா மித்ரா. அவர் 1909 இல் இருபது வயதில் பிவாபதி போஸை மணந்தார், மேலும் தம்பதியருக்கு எட்டு குழந்தைகள் இருந்தனர், அவர்கள் முதிர்வயது வரை உயிர் பிழைத்தனர்.

சரத் போஸ் , ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியின் பிரசிடென்சி கல்லூரியில் படித்தார் , பின்னர் கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டார் , பின்னர் 1911 இல் இங்கிலாந்து சென்று ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றினார். லிங்கன்ஸ் இன்னில் வழக்கறிஞர் பணிக்கு அழைக்கப்பட்டார் . இந்தியா திரும்பியதும் அவர் ஒரு வெற்றிகரமான சட்டப் பயிற்சியைத் தொடங்கினார், ஆனால் பின்னர் அதைக் கைவிட்டு இந்திய சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார் .

அரசியல் வாழ்க்கை

1936 ஆம் ஆண்டு, போஸ் வங்காளப் பிரதேச காங்கிரஸ் குழுவின் தலைவரானார், மேலும் 1936 முதல் 1947 வரை அகில இந்திய காங்கிரஸ் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார். ஃபஸ்லுல் ஹக் அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சராக சேரவிருந்ததற்கு முந்தைய நாள் சுபாஷ் தப்பிச் சென்ற பிறகு சரத் போஸ் கைது செய்யப்பட்டார். அவர் மெர்காராவில் உள்ள சிறைக்கும் பின்னர் குன்னூரில் உள்ள சிறைக்கும் மாற்றப்பட்டார், அங்கு அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. 4 ஆண்டு சிறைத்தண்டனைக்குப் பிறகு செப்டம்பர் 1945 இல் அவர் விடுவிக்கப்பட்டார். 1946 முதல் 1947 வரை, போஸ் மத்திய சட்டமன்றத்திற்கு காங்கிரஸ் குழுவை வழிநடத்தினார். சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்குவதை அவர் கடுமையாக ஆதரித்தார் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார் . 1945 ஆம் ஆண்டு தனது சகோதரர் இறந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, ஐஎன்ஏ பாதுகாப்பு மற்றும் நிவாரணக் குழுவின் மூலம் ஐஎன்ஏ வீரர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் உதவி வழங்குவதற்கான முயற்சிகளுக்கு போஸ் தலைமை தாங்கினார் . 1946 ஆம் ஆண்டில், அவர் பணிகள், சுரங்கங்கள் மற்றும் அதிகாரங்களுக்கான இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார் - ஜவஹர்லால் நேரு மற்றும் சர்தார் வல்லபாய் படேல் தலைமையிலான தேசிய நிர்வாகக் குழுவில் அமைச்சர் பதவி , இந்திய வைஸ்ராயால் தலைமை தாங்கப்பட்டது.

வங்காளப் பிரிவினையும் பிற்கால வாழ்க்கையும் இருப்பினும், வங்காளத்தை இந்துக்கள் பெரும்பான்மை மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மை பகுதிகளுக்கு இடையில் பிரிக்க வேண்டும் என்ற அமைச்சரவை மிஷன் திட்டத்தின் அழைப்பில் கருத்து வேறுபாடு காரணமாக போஸ் AICC-யில் இருந்து ராஜினாமா செய்தார் . வங்காள முஸ்லிம் லீக் தலைவர்களான ஹுசைன் ஷாஹீத் சுஹ்ரவர்தி மற்றும் அபுல் ஹாஷிம் ஆகியோருடன் ஒன்றுபட்ட ஆனால் சுதந்திரமான வங்காளம் மற்றும் வடகிழக்கு ஐக்கிய வங்கத்திற்கான முயற்சியை அவர் உருவாக்க முயன்றார் . முகமது அலி ஜின்னா ( பாகிஸ்தானின் ஸ்தாபக தந்தையான அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவர் ) அதை ஆதரித்தார். மகாத்மா காந்தியும் அதை ஆதரித்தார். இந்திய தேசிய காங்கிரசும் வங்காளத்தைச் சேர்ந்த இந்திய சட்டமன்றத்தின் இந்து உறுப்பினர்களும் அதை எதிர்த்தனர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, போஸ் தனது சகோதரரின் ஃபார்வர்ட் பிளாக்கை வழிநடத்தி , வங்காளத்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு சோசலிச அமைப்பை ஆதரித்து சோசலிச குடியரசுக் கட்சியை உருவாக்கினார். அவர் பிப்ரவரி 20, 1950 அன்று கல்கத்தாவில் 60 வயதில் இறந்தார்.



குடும்பம்

சரத் போஸ் 1909 ஆம் ஆண்டு அக்ஷோய் குமார் டே மற்றும் சுபலா டே ஆகியோரின் மகள் பிவாபதி டேயை மணந்தார்.

இந்த தம்பதியருக்கு எட்டு குழந்தைகள் பிறந்தனர். இவர்களது குழந்தைகளில் ஜெர்மனியைச் சேர்ந்த வேதியியலில் முனைவர் பட்டம் பெற்ற அசோக் நாத் போஸ் ; வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்று நாடாளுமன்ற உறுப்பினரான அமியா நாத் போஸ் , பர்மாவிற்கான இந்தியத் தூதராகவும் இருந்தார்; குழந்தை மருத்துவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆன சிசிர் குமார் போஸ் , மின் பொறியியலாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த சுப்ரதா போஸ் ஆகியோர் அடங்குவர். அவரது இளைய மகள் பேராசிரியர் சித்ரா கோஷ் , ஒரு புகழ்பெற்ற கல்வியாளர், சமூக விஞ்ஞானி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார். அவரது மூத்த பேரன் சுகதா போஸ் , ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கடல்சார் வரலாறு மற்றும் விவகாரங்களில் கார்டினர் பேராசிரியராகவும் , மக்களவையின் முன்னாள் உறுப்பினராகவும் உள்ளார் . அவரது இளைய பேரன் சுமந்திர போஸ் , லண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியல் பள்ளியில் ஒப்பீட்டு அரசியல் பேராசிரியராக உள்ளார். கொல்கத்தாவில் உள்ள சரத் சந்திர போஸின் சிலை

கௌரவங்கள்

கல்கத்தா உயர்நீதிமன்றத்திற்கு அருகில் சரத் சந்திர போஸின் சிலை அமைந்துள்ளது. ஜனவரி 2014 இல், சரத் சந்திர போஸ் நினைவு சொற்பொழிவு நிறுவப்பட்டது, மேலும் முதல் சொற்பொழிவை சர்வதேச புகழ் பெற்ற வரலாற்றாசிரியர் லியோனார்ட் ஏ. கார்டன் நிகழ்த்தினார் - அவர் சரத் மற்றும் அவரது தம்பி சுபாஸின் கூட்டு வாழ்க்கை வரலாற்றை "பிரதர்ஸ் அகைன்ஸ்ட் தி ராஜ்" என்ற தலைப்பில் எழுதியுள்ளார் .

## டெல்லியில் திடீர் வானிலை மாற்றம்: புழுதிப்புயலால் மக்கள் அவதி




**புதுடெல்லி, ஏப்.5:**

தலைநகர் டெல்லியில் அவ்வப்போது வானிலை திடீரென மாறி மக்களை சிரமத்திற்குள்ளாக்கிவிடும். அந்த வகையில் நேற்று திடீரென புழுதிப்புயல் வீசி டெல்லியையே கலங்கடித்து விட்டது. டெல்லியில் குளிர் ஓய்ந்து கடந்த சில வாரங்களாக வெயில் அடித்து வந்தது.

காற்றும் சிறிது இதமாக வீசி வந்ததால் வெயில் அவ்வளவாக தெரியவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலையில் திடீரென காற்று சூறாவளி போல சுழன்று வீசியது. இந்த காற்றால் புழுதி மேலே எழும்பி, எங்கும் ஒரே புழுதி மண்டலமாக காட்சி அளித்தது. இந்த புழுதிப்புயலால் சாலையில் நடந்து சென்றவர்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் நிலை தடுமாறினார் கள்.

நான்கு சக்கர வாகனங்களின் கண்ணாடியில் புழுதி பட்டு பார்வைத்திறனை மறைத்தது. இந்த புழுதிப்புயலுக்கு பிறகு சில இடங்களில் மழையும் பெய்தது. அப்போதும் காற்று வேகமாக வீசி மக்களை இன்னலுக்கு உள்ளாக்கியது.

இந்த திடீர் வானிலை மாற்றத்தால் மக்கள் அவதியடைந்தனர்.

ஒட்டுமொத்தத்தில் இந்த புழுதிப்புயலால் டெல்லி சிறிது நேரம் ஸ்தம்பித்தே போனது.

## சிபிஐ அதிகாரி போல் நடித்து ரூ. 71.1 லட்சம் மோசடி!



**புதுடெல்லி, ஏப்.5:**

காவல்துறையின் தகவலின்படி, தாணேவில், டோம்விவிலியைச் சேரந்த 42 வயதுடைய நபருக்கு மார்ச் முதல் வாரத்தில், இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தைச் சேர்ந்தவர் என கூறிக்கொண்டு அடையாளம் தெரியாத நபரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவரிடம் அந்த நபர், பெண்களுக்கு ஆபாசமான செய்திகளை அனுப்பியதாகவும், அதுதொடர்பாக காட்கோபர் காவல் நிலையத்தில் அவர் மீது வழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வழக்கு சிபிஐ விசாரித்து வருவதாகவும் கூறினார்.


அதன் தொடர்ச்சியாக, அவரது வங்கிப் பரிவர்த்தனைகள் மோசடி நடவடிக்கைகளைக் காட்டுவதாகக் குற்றம் சாட்டினார்.

மேலும், இந்த வழக்குத் தொடர்பாக அமலாக்கத்துறை உள்ளிட்ட பல்வேறு முகமைகள் விசாரிக்கும் என போலி நபர்கள் கூறியுள்ளனர். தாங்கள் சொல்வது உண்மை என்று நம்பவைக்க உச்ச நீதிமன்றத்திலிருந்து வந்தவை எனப் போலி ஆவணங்களையும் பாதிக்கப்பட்ட நபருக்கு அனுப்பினர். இந்த வழக்கை முடித்துவைப்பதற்காக, பாதிக்கப்பட்டவரிடம் தவணை முறையில் பணத்தைக் கேட்டு மிரட்டியுள்ளனர். பின்னர், அந்தத் தொகை தவணை முறையில் திரும்ப அளிக்கப்படும் என உறுதியளித்ததாகவும் அவர்கள் கூறினர்.

பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து இணையவழிப் பரிவர்த்தனைகள் மூலம் மொத்தம் ரூ. 71.1 லட்சத்தை அந்த மோசடியாளார்களுக்கு அனுப்பியுள்ளார். இந்த தகவலைப் பாதிக்கப்பட்ட நபர் வங்கிப் பரிவர்த்தனை விவரங்களைத் தனது மனைவியிடம் பகிர்ந்துகொண்ட பின்னரே, அவரது மனைவி அந்த மோசடியாவார்களிடம் கேள்விகள் எழுப்பியதுடன், அவர்கள் அனுப்பிய ஆவணங்களையும் சரிபார்த்தார். ஆவணங்களில் முரண்பாடுகள் இருப்பதைக் கண்டறிந்ததும், தாங்கள் ஏமாற்றப்பட்டிருப்பதை அந்தக் குடும்பத்தினர் உணர்ந்தனர்.

இதையடுத்து, திலக் நகர் காவல் நிலையத்தில் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின் கீழ் மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## திருப்பதி மலைப்பாதையில் கார் தீப்பிடித்து எரிந்தது




**திருப்பதி, ஏப்.5:**

திருப்பதியைச் சேர்ந்தவர் லாவண்யகுமார், கார் டிரைவர். இவர் சொந்தமாக கார் வைத்துள்ளார். இவர் நேற்று முன்தினம் மாலை திருப்பதியில் இருந்து காரில் பக்தர்களை ஏற்றி கொண்டு திருமலையை நோக்கி புறப்பட்டார். 2-வது மலைப்பா தையில் சென்ற கார் திருமலை ஜி.என்.சி. டோல்கேட் அருகே திவ்யாராமம் பகுதியில் சென்றபோது, காரின் என்ஜினில் இருந்து திடீரெனப் புகை வந்தது. இதை கவனித்த அவர் உடனே சாலையோரம் காரை நிறுத்தினார். அடுத்த ஒருசில நிமிடங்களிலேயே தீ வேகமாகப் பரவி எரிந்தது. காரில் பயணம் செய்தவர்கள் கீழே குதித்து தப்பினர்.

இந்த தீ விபத்து குறித்து தகவல் அறிந்ததும் திருமலை தீய ணைப்புப்படை வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தண்ணீரை பீய்ச்சியடித்து தீயை கட்டுப்படுத்தினர். தீ விபத்தால் எந்த உயிர் சேதமும் ஏற்படவில்லை. திருமலை போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் காரின் பேட்டரி அதிக வெப்பமடைந்ததால் ஷார்ட் சர்க்யூட் ஏற்பட்டு தீ விபத்து ஏற்பட்டதாக, தெரிய வந்தது.

## சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்களின் மறைவிடத்தில் ரூ.11 கோடி மதிப்பிலான சுவிஸ் தங்க கட்டிகள் பறிமுதல்



**பிஜப்பூர், ஏப்.5:**

சத்தீஸ்கர் மாநில பஸ் தார் சரக ஐ.ஜி. சுந்தர்ராஜ் பட்டிலிங்கம் கூறியதாவது: மாவோயிஸ்ட் முக்கியத் தலைவர் ரூபேஷ் சரணடைந்ததைத் தொடர்ந்து, கிளர்ச்சியாளர்களின் தளபதி பாப்பாராவ் என்பவருக்காகப் பெருமளவு ரொக்கம், தங்கம் பிஜாப்பூர் வனப்பகுதிக்கு மாற்றப்பட்டதாகத் தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில், கடந்த 10 நாட்களாக நடத்தப்பட்ட தீவிர விசாரணையைத் தொடர்ந்து, அடர்ந்த வனப்பகுதியில் உள்ள மாவோயிஸ்ட்களின் மறைவிடம் கண்டறியப்பட்டது.

அங்கிருந்து சுவிஸ் முத்திரையுடன் கூடிய தங்க கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. சுமார் 7.2 கிலோ எடை கொண்ட இந்த தங்க கட்டிகளின் மதிப்பு ரூ.11.16 கோடி.

தங்கக் கட்டிகளில் சுவிஸ் முத்திரை இருப்பதுதான் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. தடயவியல் சோதனைகளுக்குப் பின்னரே இதன் தரம் மற்றும் உண்மைத்தன்மை குறித்துத் தெரியவரும். இது தொடர்பாகத் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஒரே நேரத்தில் அரசு வேலை பெற்று இரட்டை சகோதரிகள் அசத்தல்

**மலப்புரம், ஏப்.5:**

கேரளம் மாநிலம் மலப்புரம் மாவட்டம் எடக்கரா அடுத்த சுங்கத்தாரா அருகே மணாலி பகுதியை சேர்ந்தவர் பாபு. இவரது மனைவி சிந்து. இவர்களது மகள்கள் அஞ்சனா (30 வயது), அர்ச்சனா (30 வயது). இரட்டை சகோதரிகள் ஆவர். இருவருக்கும் திருமணமாகி விட்டது. பிறப்பு முதல் இருவரும் சேர்ந்து பயணித்த நிலையில் அரசு தேர்வுக்கும் ஒன்றாக தயாராகி, எழுதி தேர்ச்சியடைந்து தற்போது வேலையையும் பெற்று அசத்தியுள்ளனர்.

அஞ்சனா கல்லூரியில் அறிவியல் பாடம் எடுத்து எம்.எஸ்சி., எம்.எல்.டி. படித்துள்ளார். அர்ச்சனா, பொறியியல் படித்துள்ளார். தொடர்ந்து இருவரும் அரசு வேலையில் சேரும் கனவுடன் கேரளம் பொதுசேவை ஆணைய தேர்வுக்கு (PSC) கஷ்டப்பட்டு படித்து தயாராகி வந்தனர். அதன்படி சமீபத்தில் நடந்த தேர்வை எழுதினர். இதைத் தொடர்ந்து வெளியான தேர்வு முடிவில் அவர்கள் தேர்ச்சி பெற்று தரவரிசை பட்டியலில் இடம்பிடித்தனர்.

இந்த நிலையில் அவர்கள் அரசு வேலையில் நியமிக்கப்பட்டு பணி ஆணையை பெற்றுள்ளனர். அதன்படி அஞ்சனா கோழிக்கோடு அரசு மருத்துவ கல்லூரியில் ஆய்வக தொழில்நுட்ப வல்லுனராக நியமிக்கப்பட்டுள்ளார். அர்ச்சனா, திரூரில் உள்ள சப்ளை -கோ கிடங்கில் உதவி விற்பனையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் இரட்டை சகோதரிகள் மற்றும் அவரது பெற்றோர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அவர்களுக்கு உறவினர்கள், நண்பர்கள் என பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## எதிர்க்கட்சிகளின் நோக்கம் வீக் புதுச்சேரி: எமது நோக்கம் பெஸ்ட் புதுச்சேரி - பிரதமர் மோடி

**புது டெல்லி, ஏப்.5:**

பிரதமர் மோடி தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:-

புதுச்சேரியில் நடைபெற்ற சாலை பேரணி மிகச்சிறப்பாக அமைந்தது. புதுச்சேரி மக்கள் தேசிய ஜனநாயக கூட்டணி அரசை மீண்டும் தேர்ந்தெடுக்க முடிவு செய்துவிட்டனர், இதன்மூலம் பெஸ்ட் புதுச்சேரியை உருவாக்கும் எங்கள் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம். சாலை பேரணியில் பெண்களும், இளைஞர்களும் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றதாக பிரதமர் கூறினார். கடந்த முறை நான் புதுச்சேரிக்கு வந்திருந்தபோது பல்வேறு முக்கிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஊரக பகுதிகளில் 41 சாலைகளின் கட்டுமானம், புதுச்சேரியில் ஒரு பாரம்பரிய நகரத்தின் உருவாக்கம், சதுப்பு நில காடுகளை மீட்டெடுத்தல் மற்றும் குடிநீர் விநியோக மேம்பாடு உள்ளிட்டவை இதில் அடங்கும். இந்த பணிகள் அனைத்தும் உரிய காலத்தில் நிறைவடைவதை இந்த இரட்டை எஞ்சின் அரசு உறுதி செய்யும் என தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி பெஸ்ட் புதுச்சேரியை உருவாக்க பாடுபடும் வேளையில், எதிர்க்கட்சிக்கு புதுச்சேரியின் முன்னேற்றம் குறித்து எந்தத் தொலைநோக்கு பார்வையும் இல்லை. அவர்கள் மக்களின் விருப்பத்திற்கு செவிசாய்ப்பதற்கு பதிலாக, புதுச்சேரியை ஒரு ஏடிஎம் போல பயன்படுத்தி, தில்லியில் உள்ள உயர் தலைமை ஆட்சியின் கீழ் அது இருப்பதை உறுதி செய்ய விரும்புகிறார்கள்.

சில நாட்களுக்கு முன், நான் புதுச்சேரி பிஜேபி வாக்குச்சாவடி முகவர்களுடன் உரையாடி கொண்டிருந்தேன். அப்போது எமது கட்சியின் செயல்வீரர் ஒருவர், எதிர்க்கட்சியின் நோக்கம் ஒரு WEAK புதுச்சேரியை உருவாக்குவதே என்று மிக சரியாகவே கூறினார் என்று மோடி தெரிவித்தார்.

அவர் WEAK என்று கூறியதன் பொருள் இதுதான்:

W- மோசமாக நிர்வாகம் செய்தல்

E- வளர்ச்சிக்கு முடிவு கட்டுதல்

A - மக்களுக்கு எதிராக இருத்தல்

K- பொருளாதாரத்தை அழித்தல்

இவ்வாறு அதில் தெரிவித்தார்.

## மதுவிலக்கு அமலில் இருந்த போதிலும் பீகாரில் பயங்கரம்: கள்ளச்சாராயத்திற்கு 4 பேர் பலி

**பாட்னா, ஏப்.5:**

பீகார் மாநிலம், கிழக்கு சம்பாரன் மாவட்டத்தின் மோதிஹாரி உள்ள துர்கௌலியா மற்றும் ரகுநாத்பூர் பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை இரவு அங்கு உள்ள மக்கள் கள்ளச்சாராயம் குடித்துள்ளனர். இதில் கலக்கப்பட்டிருந்த மெத்தனால் அல்லது தொழிற்சாலை ஸ்பிரிட் காரணமாக விஷத்தன்மை ஏற்பட்டு இருக்கலாம் என தெரிகிறது. இந்த நிலையில் கள்ளச்சாராயம் குடித்த சில மணி நேரத்திலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான வாந்தி, மயக்கம், தலைவலி மற்றும் பார்வை இழப்பு ஏற்பட்டுள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் ஏழு பேர் சிகிச்சைக்கு பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர். ஆனால் இதுவரை இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது நான்காக உயர்ந்துள்ளதாக கிழக்கு சம்பாரன் மாவட்ட ஆட்சியர் சௌரப் ஜோர்வால் தெரிவித்தார். இந்த சம்பவம் அறிந்த போலீசார் உடனடியாக தீவிர விசாரணையை தொடங்கினர். முதற்கட்டமாக கடமையில் கவனக்குறைவாக இருந்ததாக கூறி, துர்கௌலியா காவல் நிலைய பொறுப்பு அதிகாரி மற்றும் கிராம காவலர் ஆகியோர் உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கிராம காவலர் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் சௌரப் ஜோர்வால் தெரிவித்தனர். கள்ளச்சாராயம் விநியோகம் செய்ததாக கருதப்படும் முக்கிய குற்றவாளி மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும். மேலும் மாவட்ட காவல்துறை மற்றும் மதுவிலக்கு அதிரடிப்படை குழுவினர் அந்த பகுதிகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். பீகாரில் 2016 முதல் மதுவிலக்கு அமலில் இருந்தாலும், கள்ளச்சாராய விற்பனை மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகவும். மேலும் இந்த சம்பவம் மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## மனைவியுடன் வாக்குவாதம்: குழந்தையை கோடாரியால் கொன்ற கொடூர தந்தை கைது

**லக்னோ, ஏப்.5:**

உத்தரபிரதேச மாநிலம் சுல்தான்பூர் பகுதியை சேர்ந்தவர் ஷம்புத்யாயல் கோரி. இவர் தனது மனைவி மற்றும் 9 மாத குழந்தையுடன் அப்பகுதியில் வசித்து வருகிறார். இவருக்கும், இவரது மனைவிக்கும் இடையே அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில், இன்றும் வழக்கம்போல இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த சம்புத்யாயல், தனது மனைவியை கொலை செய்யும் நோக்கில், அங்கிருந்த கோடாரியை கொண்டு தாக்கியுள்ளார். இதில் அவரது மனைவி காயமடைந்தார்.

மேலும், ஆத்திரம் தீராத அவர், பச்சிளம் குழந்தை என்றும் பாராமல் தனது 9 மாத குழந்தையை கோடாரியால் கொலை செய்துள்ளார். இதில் அந்த குழந்தை சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், குழந்தையின் உடலை பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த கொடூர செயலில் ஈடுபட்ட சம்புத்யாயலை போலீசார் கைதுசெய்தனர்.

போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், குற்றம் சாட்டப்பட்டவர் சற்று மனநிலை பாதிக்கப்பட்டு இருக்கலாம் என தெரிய வந்துள்ளது.

மேலும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர். கணவன் - மனைவி இடையேயான சண்டையில் பச்சிளம் குழந்தை கொலை செய்யப்பட்ட சம்பவம், அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கேரளாவில் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.25 லட்சத்துக்கு மருத்துவ காப்பீடு; காங்கிரஸ் கட்சி வாக்குறுதி



**திருவனந்தபுரம், ஏப்.5:**

கேரள மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல் வருகிற 9-ஆம்தேதிநடைபெறுகிறது. இதையொட்டி காங்கிரஸ் தலைமையிலான ஜனநாயக முன்னணி கூட்டணியின் தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையை தெலுங்கானா முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி நேற்று எர்ணாகுளம் மாவட்டம் கொச்சியில் வெளியிட்டார். அதில் இடம்பெற்ற வாக்குறுதிகள் விவரம் வருமாறு:-

இந்திரா உத்தரவாதம் அடிப்படையில், கேரள அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணம் வழங்கப்படும்.

கல்லூரிமாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 நிதியுதவி வழங்கப்படும். ஓய்வூதியத் தொகை ரூ.3 ஆயிரமாக உயர்த்தப்படும்.

உம்மன் சாண்டி சுகாதார காப்பீடு திட்டத்தின் கீழ் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.25 லட்சம் வரை மருத்துவ காப்பீடு வழங்கப்படும்

படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க ரூ.5 லட்சம் வட்டியில்லா கடன் வழங்கப்படும்.

பெண்களுக்கு 'குடும்பஸ்ரீ' என்ற மகளிர் சுய உதவிக்குழு போல, ஆண்களுக்கு சுய உதவிக்குழுவாக 'யுவஸ்ரீ' என்ற திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆன்லைன் டாக்சி திட்டத்தில் ஏற்படும் குறைபாடுகளை பரிசீலித்து, அவற்றை உரிய முறையில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆன்லைன் டாக்சி வாடிக்கையாளர்களுக்காக 24 மணி நேரமும் இயங்கும் உதவி மையம் அமைக்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் தரையில்கிடக்கும்நிலையை மாற்றி, சிகிச்சைக்காக அனுமதிக்கும்போது கட்டாயமாக படுக்கை வசதி செய்து தரப்படும்"

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'சைபர் கிரிமினல்களை தனிமைச் சிறையில் அடைக்க வேண்டும்' - சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி ஆவேசம்



**புதுடெல்லி, ஏப்.5:**

உத்தர பிரதேசத்தில் பகுதி நேர வேலைவாய்ப்பு தருவதாக கூறி சுமார் 6 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மோசடி செய்த வழக்கில் சூரஜ் ஸ்ரீவஸ்தவ், தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி தாக்கல் செய்த மனு இன்று சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி சூர்யகாந்த், "கொலை குற்றவாளிகளைக் கூட சீர்திருத்தி விடுவிக்க வாய்ப்புள்ளது. ஆனால் இதுபோன்ற சைபர் கிரிமினல்களை செல்போன் உள்ளிட்ட உபகரணங்களை பயன்படுத்த முடியாதபடி தனிமைச் சிறையில் அடைப்பதே சரியான தீர்வாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

அதோடு, ஜாமீன் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.




# ஏடிஎம் மையத்தில் பணம் எடுக்க உதவுவதாகக் கூறி பல மாநிலங்களில் வயதானவர்களிடம் பண மோசடி செய்த ஆந்திர இளைஞர் கைது



**சென்னை, ஏப்.05:** ஏடிஎம் மையத்தில் பணம் எடுக்க உதவுவது போல வயதானவர்கள், மாற்றுத் திறனாளிகளை குறிவைத்து பல மாநிலங்களில் பண மோசடியில் ஈடுபட்ட ஆந்திர இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பார்வைத்திறனற்ற மாற்றுத் திறனாளி பாண்டியன் (61). இவர் வேலை நிமித்தமாக சென்னை வந்து கடந்த 31-ம் தேதி சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள வங்கி ஏடிஎம் மையத்தில் பணம் எடுக்கச் சென்றார்.

அப்போது அங்கு வந்த நபர் ஒருவர் பாண்டியனிடம் பணம் எடுக்க உதவி செய்வதாகக் கூறி ஏடிஎம் கார்டு மற்றும் பின் நம்பரை வாங்கி ஏடிஎம் இயந்திரத்தில் போட்டுவிட்டு, பணம் இல்லை என்று கூறி அவரை ஏமாற்றி, மறைத்து வைத்திருந்த மற்றொரு ஏடிஎம் கார்டை கொடுத்து அனுப்பியுள்ளார்.

பின்னர் அந்த நபர் பாண்டியனின் ஏடிஎம் கார்டை அருகில் உள்ள வேறு ஏடிஎம் மையத்தில் பயன்படுத்தி ரூ.23,500-ஐ எடுத்தபோது, பாண்டியனின் செல்போனுக்கு குறுஞ்செய்தி வந்தது. இதையறிந்து அதிர்ச்சி அடைந்த அவர் இந்த விவகாரம் தொடர்பாக அண்ணாசதுக்கம் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார்.

அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக வங்கி ஏடிஎம் மையத்தில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். இதில் முதியவரை ஏமாற்றி அவரது ஏடிஎம் கார்டை பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்டது ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சிடாதாலா சுனில் (27) என்பது தெரிந்தது.

தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். அவரிடமிருந்து ஒரு செல்போன், 79 ஏடிஎம் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. போலீஸாரின் விசாரணையில், சிடாதாலா சுனில் ஆந்திர மாநிலத்தில் பெட்ரோல் பங்க்கில் வேலை செய்து வந்துள்ளார்.

இவர் ஏடிஎம் மையங்களில் பொதுமக்கள் மறந்து விட்டுச்செல்லும் ஏடிஎம் கார்டுகளை எடுத்து வைத்துக்கொண்டு பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள், வயதானவர்களைக் குறிவைத்து ஏமாற்றி பணத்தைத் திருடி வந்தது தெரிந்தது. இதேபோல பல்வேறு மாநிலங்களில் கைவரிசை காட்டியுள்ளார் எனத் தெரியவந்தது. இதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# வங்கி லாக்கரில் இருந்து வாடிக்கையாளர்களின் நகைகளை திருடிய முன்னாள் பெண் அதிகாரி மீண்டும் கைது



**சென்னை, ஏப்.05:** வங்கி லாக்கரில் இருந்து வாடிக்கையாளர்களின் 2 கிலோ தங்க நகைகள் நூதன முறையில் திருடப்பட்ட வழக்கில் வங்கியின் முன்னாள் பெண் அதிகாரி 2-வது முறையாக கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை வேளச்சேரி 100 அடி சாலையில் உள்ள தனியார் வங்கியில் கடந்த டிச.5-ம் தேதி பர்தா அணிந்தபடி பெண் ஒருவர் வந்தார். தன்னை சர்மிளா பானு என அறிமுகம் செய்து கொண்டார். தனது கணவர் அப்துல் இந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளார்.

அதேபோல, தனக்கும் கணக்கு தொடங்க வேண்டும் என கேட்டுள்ளார். இந்த நிலையில், வங்கிக் கணக்கு தொடங்க தேவையான ஆவணங்களை எடுத்து வருவதாக கூறிச் சென்ற அந்தப் பெண், திரும்ப வரவில்லை. இதற்கிடையே, அவர் அமர்ந்திருந்த இருக்கையில் ஒரு பெரிய பர்ஸ் இருந்தது.

அதை வங்கி அதிகாரிகள் திறந்து பார்த்தபோது, தங்க பிஸ்கட், வளையல் உட்பட சுமார் 2 கிலோ தங்க நகை இருந்துள்ளது. இதுகுறித்து வங்கி அதிகாரிகள் வேளச்சேரி காவல் நிலையத்தில் தங்கத்தை ஒப்படைத்து புகார் அளித்தனர்.


நகையை விட்டுச் சென்றது வங்கியின் முன்னாள் ஊழியரான வேளச்சேரியைச் சேர்ந்த பத்மபிரியா (38) என்பது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. இவர், லாக்கரில் வைக்கப்படும் நகைகளை மேற்பார்வையிடும் அதிகாரியாக இருந்துள்ளார்.

அப்போது, தணிக்கை செய்வதாக கூறி வாடிக்கையாளர்களின் நகைகளை சிறிது சிறிதாக திருடி உள்ளார். இந்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டவர் ஜாமீனில் வெளியே வந்துள்ளார்.

பின்னர், கைவசம் இருந்த நகைகளை யாருக்கும் தெரியாமல் வங்கியில் எடுத்த லாக்கரிலேயே வைக்க முயன்றபோது அது முடியாததால் அந்தநகைகளை வங்கியிலேயே விட்டுச் சென்றது தெரியவந்தது.

இந்த வழக்கு சென்னை மத்திய குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில் அந்த பிரிவு போலீஸார் அவரை மீண்டும் கைது செய்துள்ளனர்.

# தேர்சக்கரத்தில் சிக்கிய இளைஞர் உயிரிழப்பு மண்ணடியில் துயரம்



**சென்னை, ஏப்.05:** மண்ணடி லிங்கிசெட்டி தெருவில் பழமையான மல்லிகேஸ்வரர் கோவில் உள்ளது. இக்கோவிலில் தேரோட்டம் கடந்த மாதம் 29ம் தேதி நடந்தது. தேரை ஆங்காங்கே நிறுத்துவதற்காக சக்கரத்தின் கீழ் மரத்தடுப்பு கட்டை வைக்கும் பணியில் மண்ணடி புது தெருவை சேர்ந்த குபேந்திரன் (24) என்பவர் ஈடுபட்டிருந்தார்.

தேரின் வலது சக்கரத்தில் தடுப்புக்கட்டை வைத்தபோது எதிர்பாராத விதமாக குபேந்திரன் கீழே விழுந்து தேர் சக்கரத்தில் சிக்கி படுகாயமடைந்தார். இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள் ரத்த வெள்ளத்தில் துடித்த குபேந்திரனை மீட்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் குபேந்திரன் பரிதாபமாக பலியானார். மண்ணடியில் மல்லிகேஸ்வரர் கோவில் தேரோட்டத்தின்போது தேர்சக்கரத்தில் சிக்கி படுகாயமடைந்த வாலிபர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவு: தூத்துக்குடி எஸ்.பி. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்



**தூத்துக்குடி, ஏப்.05:** தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. மதன், தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் குற்ற சம்பவங்கள் நடவாமல் தடுக்கும் பொருட்டு புதிதாக சி.சி.டி.வி. கேமராக்களை நிறுவி பொதுமக்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அனைத்து உட்கோட்ட டி.எஸ்.பி.க்களுக்கு உத்தரவிட்டார்.

அதன்படி தூத்துக்குடி, தூத்துக்குடி நகர உட்கோட்டத்தில் 58 புதிய சிசிடிவி கேமராக்களும், ஊரக உட்கோட்டத்தில் 114, திருச்செந்தூரில் 52, சாத்தான்குளத்தில் 29, ஸ்ரீவைகுண்டத்தில் 59, மணியாச்சியில் 24, கோவில்பட்டியில் 73, மற்றும் விளாத்திகுளத்தில் 51 என அனைத்துஉட்கோட்டங்களிலும் மொத்தம் 460 புதிய சி.சி.டி.வி. கேமராக்கள் பொதுமக்கள் மற்றும் காவல்துறையினரின் கூட்டு முயற்சியால் நிறுவப்பட்டன.

அதன்படி திருச்செந்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தேரிகுடியிருப்பு பகுதிகளில் காவல்துறை மற்றும் பொதுமக்கள் இணைந்து புதிதாக நிறுவப்பட்ட சி.சி.டி.வி. கேமராக்களை மாவட்ட எஸ்.பி. மதன் துவக்கி வைத்து அப்பகுதி பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

மேலும் அவர் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் தூத்துக்குடி மாவட்டத்தில் சி.சி.டி.வி. கேமராக்கள் புதிதாக நிறுவப்பட்ட அனைத்து இடங்களிலும் காவல்துறையினர் நேரடியாக ஆய்வு செய்து அப்பகுதி பொதுமக்களுக்கு தேர்தலில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உத்தரவிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் திருச்செந்தூர் உட்கோட்ட டி.எஸ்.பி. மகேஷ்குமார் உள்பட காவல்துறை அதிகாரிகள் காவலர்கள் மற்றும் தேரிகுடியிருப்பு ஊர் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தேயிலை தோட்டத்தில் குட்டியுடன் சுற்றித்திரியும் காட்டுயானை - வனத்துறையினர் எச்சரிக்கை



**நீலகிரி, ஏப்.05:** நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளில் கரடி, சிறுத்தை, காட்டுயானைகள் உள்ளிட்ட வனவிலங்குகளின் நடமாட்டமும், அட்டகாசமும் அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக அவைகள் இரவு, பகலாக கிராமம், சாலை மற்றும் தேயிலை தோட்டத்திற்குள் வந்து மக்கள், தொழிலாளர்களை அச்சுறுத்துவதுடன் தாக்கும் அபாயம் நிலவுகிறது. இதனால் அவர்கள் அச்சத்தில் உள்ளனர்.

இதற்கிடையே சமவெளி பகுதிகளில் தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் உணவு மற்றும் தண்ணீர் கிடைக்காததால் காட்டுயானைகள் இடம்பெயர்ந்து வருகின்றன.

அதன்படி குன்னூர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக சமவெளி பகுதிகளில் இருந்து வந்த 11 காட்டு யானைகள் கூட்டம் குன்னூர் காட்டேரி பகுதியில் முகாமிட்டு சுற்றித்திரிந்து வந்தது.

இந்த கூட்டத்தில் இருந்து குட்டியுடன் பிரிந்த காட்டு யானை ஒன்று தற்போது கிளண்டேல் தேயிலை தோட்டத்தில் முகாமிட்டு சுற்றித்திரிந்து வருகிறது.

இதையறிந்த வனத்துறையினர், சம்பந்தப்பட்ட தேயிலை தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குஎச்சரிக்கை விடுத்துள்ளனர். அதாவது தேயிலை தோட்டத்தில் காட்டுயானைகள் நடமாட்டம் உள்ளதால் பணிக்கு செல்ல வேண்டாம். காட்டுயானை இருக்கும் பகுதிக்கு அருகே செல்லக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் கூட்டத்தில் இருந்து குட்டியுடன் பிரிந்த காட்டுயானை நடமாட்டத்தை கண் காணித்து.

மீண்டும் கூட்டத்தில் சேர்க்க தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# சாத்தான்குளம் வழக்கில் 9 போலீஸாருக்கும் அதிகபட்ச தண்டனை: மத்திய அரசு மனுவில் தகவல்

**மதுரை, ஏப்.05:** சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் சிறையில் இருக்கும் போலீஸார் 9 பேருக்கும் அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என மதுரை நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டுள்ளது. சாத்தான்குளத்தைச்சேர்ந்தவர் ஜெயராஜ். இவர் மகன் பென்னிக்ஸ். இவர்கள் சாத்தான்குளத்தில்செல்போன் கடை நடத்தி வந்தனர்.

கடந்த 2020 ஜூன் 19-ல் கரோனா ஊரடங்கு கட்டுப்பாட்டு நேரம் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாகக் கூறி ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் சாத்தான்குளம் போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர். பின்னர் காவல் நிலையத்தில் வைத்து இரவு முழுவதும் போலீஸார் தாக்கியதில் முதலில் பென்னிக்ஸ், அடுத்து ஜெயராஜ் உயிரிழந்தனர். இது தொடர்பாக காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோரை சிபிஐ கைது செய்தது. இந்த வழக்கை மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன் விசாரித்து 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்தார். பின்னர் இவர்களுக்கான தண்டனை தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்கவும், 9 பேரின் உடல் நிலை, மனநிலை குறித்து மருத்துவர்கள் அறிக்கை தாக்கல் செய்யவும் நீதிபதி உத்தரவிட்டார். அதன்படி மாநில அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மருத்துவ அறிக்கைகளும் தாக்கல் செய்யப்பட்டன. பின்னர் நடைபெற்ற விசாரணையில் சிபிஐ தரப்பிலும், ஜெயராஜ், பென்னிக்ஸ் தரப்பிலும், 'அரிதினும் அரிதான வழக்காக கருதி 9 பேருக்கும்தூக்கு தண்டனை வழங்க வேண்டும்' என வாதிடப்பட்டது.

மனுதாரர் சார்பில் 'தந்தை, மகன் இருவரும் திட்டமிட்டு கொலை செய்யப்படவில்லை. திடீர் ஆத்திரம் காரணமாக நடந்த சம்பவத்தில் இருவரும் உயிரிழந்துள்ளனர். இதனால் குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும்' என வாதிடப்பட்டது. பின்னர் 9 பேருக்கும் ஏப். 6-ல் தண்டனை அறிவிக்கப்படும் என்று கூறி விசாரணையை நீதிபதி தள்ளிவைத்தார்.

இந்நிலையில் சாத்தான்குளம் வழக்கு தொடர்பாக மத்திய அரசு சார்பில் விசாரணை நீதிமன்றத்தில் மின்னஞ்சல் வழியாக பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், சாத்தான்குளம் கொலை வழக்கு போலீஸ் காவல் மரணமாகும். இதில் குற்றவாளிகளுக்கு பாரபட்சம், கருணை காட்டக் கூடாது. அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

# சென்டிரல் ரெயில் நிலையத்தில் ரூ.10.67 லட்சம் மதிப்புள்ள தங்கம், பணம் பறிமுதல்

**சென்னை, ஏப்.05:** சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்திற்கு வந்து செல்லும் வெளியூர் மற்றும் வெளிமாநில ரெயில்களில் ரெயில்வே பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் உரிய ஆவணமின்றி கொண்டு வரப்படும் பணம், பரிசு பொருட்கள், தங்கம் ஆகிய வற்றை பறிமுதல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தின் நடைமேடை எண்.6ல் ரெயில்வே பாதுகாப்பு படையினர் பயணிகளிடம் திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது, சந்தேகத்திற்கிடமாக வந்த இருவரை நிறுத்தி சோதனை செய்தபோது ரூ.6 லட்சத்து 87 ஆயிரம் மதிப்புள்ள 50 கிராம் தங்கம், ரூ.3.80 லட்சம் ரொக்கம் ஆகியவற்றை ரெயில்வே பாதுகாப்பு படையினர் பறிமுதல் செய்து விசாரித்தனர்.

அதில், திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த அபிலாஷ்(32), வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பன்னீர் செல்வம் (46) ஆகியோர் உரிய ஆவணமின்றி தங்கம் மற்றும் பணத்தை கொண்டு சென்றது தெரியவந்தது.

இதையடுத்து, ரெயில்வே பாதுகாப்பு படையினர் 50 கிராம் தங்கம் மற்றும் ரூ.3.80 லட்சம் ரொக்கம் ஆகிய வற்றை பறிமுதல் செய்து நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# கடற்கரை - தாம்பரம் வழித்தடத்தில் 42 நாட்களுக்குப் பிறகு மின்சார ரயில் இயக்கம் சீரானதால் பயணிகள் மகிழ்ச்சி



**சென்னை, ஏப்.05:** கடற்கரை - தாம்பரம் - செங்கல்பட்டு வழித்தடத்தில் 42 நாட்களுக்குப் பிறகு வழக்கமான அட்டவணைப்படி ரயில்கள் இயக்கப்பட்டது. ரயில்கள் இயக்கம் சீரானதால் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் ரூ.734.91 கோடியில் மறுசீரமைப்பு பணி நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பிரம்மாண்ட நடை மேம்பாலம் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

இந்த ரயில் நிலையத்தின் 10, 11-வது நடைமேடைகளில் இதற்கான பணிகள் தொடங்கியதால், கடற்கரை - தாம்பரம் - செங்கல்பட்டு தடத்தில் கடந்த பிப்.19-ம் தேதி முதல் 44 மின்சார ரயில்களின் சேவை ரத்து செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து 45 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டன. அதாவது, 204 ரயில் சேவைகளில் இருந்து 115 சேவைகளாக குறைக்கப்பட்டன. மேலும், பராமரிப்பு பணி காரணமாக எழும்பூர் ரயில் நிலையத்தில் புறநகர் ரயில்கள் 10, 11-வது நடைமேடைகளுக்கு பதிலாக 5, 6-வது நடைமேடைகளில் இயக்கப்பட்டன.

இதனால், இரு மார்க்கங்களிலும் எழும்பூரை நோக்கிச் செல்லும்போது, அதாவது, சேத்துப்பட்டு, பூங்கா ரயில் நிலையப் பகுதியில் ரயில்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. வழக்கமாக 2 அல்லது 3 நிமிடங்களில் செல்ல வேண்டிய ரயில் 5 முதல் 15 நிமிடங்கள் வரை தாமதமானது. பள்ளி, கல்லூரிகள், அலுவலகங்களுக்குச் செல்பவர்களும், வெளியூர் விரைவு ரயில்களைப் பிடிப்பதற்காக எழும்பூர் வருபவர்களும் இதனால் மிகவும் அவதியடைந்தனர்.

இந்நிலையில், எழும்பூர் ரயில் நிலையத்தில் 10, 11-வது நடைமேடையில் நடைமேம்பாலம் அமைக்கும் பணிகள் முடிந்ததை அடுத்து 42 நாட்களுக்குப் பிறகு, நேற்று முதல் வழக்கமான அட்டவணைப்படி ரயில்கள் இயக்கப்பட்டன. ரயில்கள் இயக்கம் சீரானதால் பயணிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

நேற்று இந்த வழித்தடத்தில் இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை இயக்கப்படும் ரயில்கள் மற்றும் ஒரு சில ரயில்கள் மட்டுமே ரத்து செய்யப்பட்டு, சில ரயில்கள் நேரம் மாற்றம் செய்யப்பட்டு இயக்கப்பட்டது.

இன்று முதல் 7-ம் தேதி வரையில், இரவு 11 மணி முதல் அதிகாலை 5 மணி இடையே இயக்கப்படும் ரயில்கள் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

# காவல் ஆணையர் அலுவலகத்தில் தீப்பிடித்து ஆவணங்கள் சேதம்

**சென்னை, ஏப்.05:** காவல் ஆணையர் அலுவலகத்தில் தீப்பிடித்ததில் ஆவணங்கள், கம்ப்யூட்டர் சேதமடைந்தன. வேப்பேரி ஈவிகே சம்பத் சாலையில் சென்னை காவல் துறையின் தலைமை அலுவலகம் உள்ளது. 8 தளங்கள் கொண்ட இந்த அலுவலகத்தில் காவல் துறையின் பல்வேறு பிரிவுகள் செயல்படுகின்றன. 2-வது தளத்தில் மத்திய குற்றப்பிரிவு உள்ளது. இந்நிலையில், இந்த தளத்தில் இருந்து நேற்று காலை 7 மணி அளவில் கரும்புகை வெளியேறியது. போலீஸார் உடனடியாக தீயணைப்புத் துறைக்கு தகவல் கொடுத்தனர்.

தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து, தண்ணீரை பீச்சியடித்து தீயை அணைத்தனர்.

அதற்குள், சில ஆவணங்கள், கம்ப்யூட்டர், பர்னிச்சர் பொருட்கள் ஆகியவை சேதமடைந்தன.

மின்கசிவால் தீப்பிடித்ததாக கூறப்படுகிறது. விபத்துக்கான காரணம் குறித்து வேப்பேரி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

# சமையல் கியாஸ் தட்டுப்பாடு.. பீதியில் வாடிக்கையாளர்கள்- இந்தியன் ஆயில் நிறுவனம் விளக்கம்



**சென்னை, ஏப்.05:** மேற்கு ஆசியாவில் ஈரான் உடனான இஸ்ரேல் ராணுவத்தின் போரில் அமெரிக்கா தலையிட்டு பயங்கர தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், கச்சா எண்ணெய் கிணறுகள் ஆகியவற்றை குறிவைத்து ஈரான் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

மேலும் இந்தியாவின் 80 சதவீதம் கச்சா எண்ணெய் கொண்டு செல்ல பயன்படும் முக்கிய போக்குவரத்து தடமான ஹார்முஸ் நீரிணையை ஈரான் ராணுவம் மூடியது. இதனால் போர்ப் பதற்றம் அதிகரித்து இந்தியா மட்டுமின்றி உலகளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே நாட்டின் எரிபொருள் மற்றும் கியாஸ் வினியோகம் சீராக உள்ளதாக முன்னணி பொதுத்துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் தகவல் தெரிவித்துள்ளது.

இதுகுறிந்து அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் நிலவும் அரசியல் பதற்றங்கள் இருந்தாலும், இந்தியாவின் சமையல் கியாஸ் வினியோகம் நிலையாகவும் போதுமானதாகவும் உள்ளது. இது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு வினியோகம் உயர்ந்த முன்னுரிமையுடன் நடைபெறுகிறது. தற்போது தினமும் 28 லட்சம் கியாஸ் சிலிண்டர்கள் வினியோகிக்கப்படுகின்றன. இது தற்போதைய பதற்றங்களுக்கு முன்பிருந்த சாதாரண அளவுடன் ஒத்ததாகும். வீடுகளுக்கு தடையற்ற வினியோகம் நடைபெற்று வருகிறது" எனப்பட்டுள்ளது.

சமையல் கியாஸ் வினியோகஸ்தர்களிடையே நடைபெறும் கள்ளச்சந்தை மற்றும் குவிப்பு தடுப்பதற்காக பல்வேறு துறைகளை சேர்ந்த குழுக்கள் திடீர் சோதனைகள் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை நாடு முழுவதும் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டு 141 டீலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும். 855 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 48 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் கியாஸ் தட்டுப்பாடு இல்லை எனவும் வாடிக்கையாளர்கள் பீதியால் முன்பதிவு செய்யவோ, சிலிண்டர்களை சேமித்து வைக்கவோ வேண்டாம். வினியோக நிலையங்களில் வரிசையில் நிற்க தேவையில்லை. வதந்திகளை நம்பாமல், அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே நம்புங்கள் என்று நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சட்ட விரோதமாக 17 கிலோ புகையிலை பொருட்கள் வைத்திருந்தவர் கைது

**திருநெல்வேலி, ஏப்.05:** திருநெல்வேலி மாவட்டம் மேலசெவல் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட, கீழஓமநல்லூர் பஸ் ஸ்டாப் அருகே சப்-இன்ஸ்பெக்டர் வள்ளிநாயகம் தலைமையிலான காவல்துறையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது மூலக்கரைப்பட்டியைச் சேர்ந்த சீனிகார்த்திக் (வயது 35) என்பவர் வந்த நான்கு சக்கர வாகனத்தை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 17 கிலோகிராம் புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து மேற்சொன்ன சப்-இன்ஸ்பெக்டர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுசீனிகார்த்திக்கை நேற்று கைது செய்தார்.

மேலும் அவரிடமிருந்து சுமார் 17 கிலோகிராம் புகையிலை பொருட்கள் மற்றும் நான்கு சக்கர வாகனத்தை கைப்பற்றி உரிய சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறார்.

# வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளர் வரிசை சீட்டில் வண்ணப் புகைப்படம்: தேர்தல் கமிஷன் தகவல்

**சென்னை, ஏப்.05:** வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளர் வரிசை சீட்டில், வேட்பாளரின் வண்ணப் புகைப்படம் ஒட்டப்படும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. இதற்கு முன் நடந்த தேர்தல்களில் இவிஎம் இயந்திரத்தில் வேட்பாளர் பெயர் சீட்டில் மூன்று வரிசை இருக்கும். முதல் வரிசையில் வரிசை எண், இரண்டாம் வரிசையில் வேட்பாளரின் பெயர், மூன்றாம் வரிசையில் அவருக்கான தேர்தல் சின்னம் இடம் பெற்றிருக்கும்.

இந்த முறை வேட்பாளரின் வண்ண புகைப்படத்தையும் இணைப்பதற்கு தேர்தல் கமிஷன் முடிவு செய்துள்ளது. இரண்டாம் வரிசையில் இடம் பெற்றுள்ள வேட்பாளரின் பெயருக்கு அடுத்தபடியாக வேட்பாளரின் வண்ண புகைப்படம் வைக்கப்படும். முதலாவது, அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளின் வேட்பாளரின் பெயர்கள், அகர வரிசையில் (அந்தந்த மாநில மொழியில்) வரிசைப்படுத்தப்படும்.

2வதாக, அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகளின் வேட்பாளரின் பெயர்கள் வரிசைப்படுத்தப்படும். 3வதாக, அங்கீகரிக்கப்படாத பதிவு பெற்ற கட்சிகளின் வேட்பாளர் பெயர்கள் அகர வரிசையில் வரிசைப்படுத்தப்படும். 4வதாக சுயேச்சை வேட்பாளர்களின் பெயர்கள் அகர வரிசையில் வரிசைப்படுத்தப்படும். கடைசி பெயராக நோட்டா இடம் பெறும்.

அகர வரிசைக்காக, பெயர்களின் முதல் எழுத்தே கருத்தில் கொள்ளப்படும் என்று தேர்தல் அதிகாரி கூறினார்.

# வாக்குப்பதிவு நாளன்று தினக்கூலி தொழிலாளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை

**சென்னை, ஏப்.05:** வாக்குப்பதிவு நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கடந்த மார்ச் 15-ம் தேதி தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் சட்டப்பேரவைகளுக்கான பொதுத்தேர்தல் மற்றும் கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களின் 8 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏப்.23-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.



மக்கள் பிரதிநிதித்துவச்சட்டம், 1951-இன் பிரிவு 135B-ன் படி, வணிகம், வர்த்தகம், தொழில் துறை நிறுவனங்கள் அல்லது வேறு ஏதேனும் நிறுவனங்களில் பணிபுரியும், வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு நபருக்கும் வாக்குப்பதிவு நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

இத்தகைய ஊதியத்துடன் கூடிய விடுமுறைக்காக ஊழியர்களின் ஊதியத்தில் எந்த பிடித்தமும் செய்யப்படக்கூடாது. இந்த விதிமுறைகளை மீறும் எந்தவொரு முதலாளியும் அபராதத்துக்கு உள்ளாவார்கள்.

அனைத்து தினக்கூலி மற்றும் தற்காலிகத் தொழிலாளர்களும் வாக்குப்பதிவு நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை பெறத் தகுதியுடையவர்கள்.

இந்த விதிமுறைகளைத் துல்லியமாகப் பின்பற்றுவதற்கும், அனைத்து வாக்காளர்களும் சுதந்திரமாகவும் வசதியாகவும் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும் தேவையான உத்தரவுகளை அனைத்து சம்பந்தப்பட்டவர்களுக்கும் பிறப்பிக்குமாறு மாநில, யூனியன் பிரதேச அரசுகளுக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# சந்தூர் ஏரி நீர் திடீரென சிவப்பு நிறமாக மாற்றம் : மக்கள் அதிர்ச்சி

**கிருஷ்ணகிரி, ஏப்.05:** கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த சந்தூர் கிராமத்தில் உள்ள தாமரை செல்லியம்மன் கோவில் பின்புறம் அமைந்துள்ள தாமரை கோவில் ஏரி, திடீரென ரத்தச் சிவப்பாக மாறியுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சந்தூர் கிராம மக்களின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் இந்த ஏரியில், கடந்த சில நாட்களாகத் தண்ணீர் மெல்ல மெல்ல நிறம் மாறத் தொடங்கி, தற்போது முற்றிலும் சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கிறது. வழக்கத்திற்கு மாறான இந்த மாற்றத்தைக் கண்டு கிராம மக்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்த ஏரி நீரை நம்பி நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. மேலும், தினமும் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இந்த ஏரிக்கு வந்து தண்ணீர் குடித்துச் செல்கின்றன.



கால்நடைகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர். மேலும் இந்த தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்தினால் பயிர்கள் கருகும் அபாயம் உள்ளதா என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் நிலத்தடி நீர் பாதிப்படைய வாய்ப்புள்ளதால் குடிநீர் ஆதாரங்கள் குறித்த அச்சமும் எழுந்துள்ளது. தண்ணீர் சிவப்பாக மாறியதற்கான காரணம் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

ஏரியில் படிந்துள்ள பாசிகள் அல்லது நுண்ணுயிரிகளின் வளர்ச்சி (Algal Bloom) காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. நிலத்தடி நீர்மட்டத்தில் ஏற்பட்டுள்ள ரசாயன மாற்றங்கள் காரணமாக இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. எனவே தண்ணீர் நிறம் மாறியுள்ளதால் அதன் தன்மையை உடனடியாக அறிய, நீரின் மாதிரியைச் சேகரித்து ஆய்வகத்திற்கு அனுப்பி ஆய்வு செய்ய வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மாவட்ட நிர்வாகமும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும் உடனடியாக தலையிட்டு, கால்நடைகள் மற்றும் விவசாயத்தைப் பாதுகாக்கும் வகையில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# 'எனக்கு ஆதியும், அந்தமும் அதிமுகதான்... வாய்ப்பு வழங்கப்படாதது குறித்து வருத்தம் இல்லை' - தனபால் உருக்கம்

**சென்னை, ஏப்.05:** 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் அதிமுக கோட்டையாக கருதப்படும் அவிநாசி தொகுதி பாஜகவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் போட்டியிடுகிறார். அதேசமயம் இத்தொகுதியில் பலமுறை தேர்வு செய்யப்பட்ட, தற்போது எம்.எல்.ஏ.வாக உள்ள முன்னாள் சபாநாயகர் தனபாலுக்கு அதிமுக வாய்ப்பு வழங்கவில்லை.

இதனால் அவரது மகன் தவெகவில் இணைந்து தேர்தலில் போட்டியிடுகிறார். தனபாலுக்கு வாய்ப்பு வழங்கப்படாதது தற்போது அதிமுகவில் பெரும் பேசுபொருளாகியுள்ளது.

இந்நிலையில் இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அதில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் மக்கள் இயக்கத்தை தொடங்கிய 1972 ஆம் ஆண்டிலிருந்து நான் என்னை இந்த இயக்கத்தில் இணைத்துக் கொண்டு ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றி வருகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் 1977-80, 1980-84 மற்றும் 1985-88 என தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராக திறம்பட பணியாற்றி இருக்கிறேன்.

அவரது மறைவிற்குப் பின்பு, புரட்சித் தலைவி ஜெயலலிதாவை தலைவராக ஏற்றுக் கொண்டு செயல்பட்டவன் நான். 2001-2006, 2011-2016, 2016-2021 மற்றும் 2021-2026 என நான்கு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டேன். 2001-2006 காலகட்டத்தில், ஆதி திராவிடர் நலன், உணவு, கூட்டுறவு போன்ற இலாக்காக்களுக்கு அம்மா என்னை அமைச்சராக நியமித்தார்கள்.

2011 ஆம் ஆண்டு என்னை பேரவைத் துணைத் தலைவராக்கிய அம்மா, 2012 ஆம் ஆண்டு பேரவைத் தலைவர் பொறுப்பினை எனக்கு வழங்கினார்கள். 2016 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக போவைத் தலைவர் பொறுப்பினை எனக்கு வழங்கினார்கள். கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவன் நான்.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, நீண்ட நாட்கள் பேரவைத் தலைவர் பதவியை வகித்தவன் என்ற பெருமையை எனக்கு வழங்கினார்கள். இதனை நினைக்கும்போது எனது நெஞ்சம் நெகிழ்கிறது.

இந்தச் சூழ்நிலையில், கடந்த ஆறு மாத காலமாக உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் என்னை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் யாரும் வந்து பார்க்கவோ, தொலைபேசி மூலம் விசாரிக்கவோ இல்லை.

இந்தத் தருணத்தில், 1988 ஆம் ஆண்டு எனக்கு விபத்து காரணமாக கால் முறிவு ஏற்பட்டபோது சம்பவ இடத்திற்கு நேரில் வந்து எனக்குத் தேவையான முதலுதவியை அளித்து என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த அம்மா அவர்களை நினைத்துப் பார்த்தேன். என் கண்களில் நீர் ததும்புகிறது. அந்தத் தாயின் கருணைக்கு என்னுடைய கோடானுகோடி நன்றிகள். தாயில்லாத நிலையை நான் இப்போது உணர்கிறேன்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட நான் வாய்ப்பு கேட்டேன் என்பது உண்மை. ஆனால், எனக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. இதில் எனக்கு வருத்தம் ஏதுமில்லை. உடல் நலம் குன்றியிருக்கும் என்னை வந்து பார்க்கவில்லை என்பதுதான் எனக்கு வருத்தம் அளிக்கிறது.

இதனால் ஏற்பட்ட விரக்தியில்தான் என்னுடைய மகன் லோகேஷ் தனபால் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்து, தற்போது ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

என்னைப் பொறுத்த வரையில், எனக்கு ஆதியும், அந்தமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான்." எனக் குறிப்பிட்டுள்ளார்.




# 'அதிமுக ஆட்சிக்கு வந்தால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்' - இபிஎஸ்



**சென்னை, ஏப்.05:** அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் அதிமுக மற்றும் அதனை கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார். அப்போது பேசிய அவர்.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சியில் பாட்டிக்கு கூட பாதுகாப்பில்லை. முதலமைச்சர் கூறுகிறார் மீண்டும் அவர்தான் ஆட்சிக்கு வருவார் என்று. திமுக ஆட்சியில் இதுவரை நடந்தது போதும் இதுபோல நடப்பதற்கு மீண்டும் அந்த ஆட்சித் தேவையா? மீண்டும் தமிழ்நாடு தலைநிமிர அதிமுக ஆட்சியமைக்க வேண்டும். சட்ட ஒழுங்கை பாதுகாக்க வேண்டும்.

சிறுபான்மை மக்கள் சிந்திக்க வேண்டும். வாக்குகளுக்காக சிறுபான்மையின மக்களுக்கு ஆசை வார்த்தைக்கூறுகிறார் ஸ்டாலின். அதிமுக மக்களுக்காக ஆட்சி செய்கிறது. 10 ஆண்டுகள் சிறப்பான ஆட்சியை கொடுத்தோம்.

குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல் தேவையா? ஸ்டாலினின் மருமகன் சபரீசனும் பொதுவெளியில் வந்துவிட்டார். ஸ்டாலின், உதயநிதி, மருமகன் சபரீசன், துர்க்கா ஸ்டாலின் என நான்கு அதிகார மையம் தமிழ்நாட்டை ஆண்டுக்கொண்டிருக்கிறது.

இன்று தமிழ்நாடு தலைகுனிய இந்த அதிகார மையங்கள்தான் காரணம். கடந்த முறை திமுக வெளியிட்ட அறிவிப்புகளில் நான்கில் ஒரு பங்கு கூட நிறைவேற்றவில்லை. இந்த தேர்தலில் திமுகவிற்கு மூடுவிழாதான்.

அண்மையில் மத்திய அரசு இந்தியா முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என அறிவித்துள்ளது. அதன்படி அதிமுக ஆட்சி அமைந்தால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்.

பல்வேறு வரிகளை உயர்த்திய திமுக அரசு மக்களுக்கு தேவையா?. அரிசி, எண்ணெய், பருப்பு உள்ளிட்டவற்றின் விலை உயர்ந்துவிட்டது. அதிமுக ஆட்சியில் ரேசனில் தரமான அரிசி வழங்கப்படும். ரேசனில் விலையில்லா பருப்பு, எண்ணெயும் வழங்கப்படும்.

திட்டங்களுக்கு பெயர் வைப்பதற்கு ஸ்டாலினுக்கு நோபல் பரிசு தரலாம். தேர்தல் அறிக்கையில் நிறைய அறிவிப்புகள் வெளியிட்டுள்ளோம். உங்களை மீட்டெடுக்க ஆட்சி அமைந்தால் ரூ.10 ஆயிரம் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும்.

அதிமுக ஆட்சி அமைந்தால் விலையில்லாமல் ஃபிரிட்ஜ் வழங்கப்படும். இப்போது வழங்கப்படும் ரூ.1000, ரூ. 2 ஆயிரமாக வழங்கப்படும். கூட்டுறவு வங்கிக் கடன் தள்ளுபடி செய்யப்படும்." என அதிமுக அறிவிப்புகளை மீண்டும் அறிவித்தார்.

# எடப்பாடி பழனிசாமியால் வருகிற தேர்தலில் நிச்சயம் வெற்றி பெற முடியாது - கனிமொழி



**திண்டுக்கல்:, ஏப்.05:** திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் தொகுதிகளில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து கனிமொழி எம்.பி. வாக்கு சேகரித்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

எதிரணியில் கூட்டணி உருவாக்கி இருக்கும் எடப்பாடி பழனிசாமி அடிக்கடி தனது நிலையை மாற்றி மாற்றி பேசக்கூடியவர். பா.ஜ.க.வுடன் இனி ஒருபோதும் கூட்டணி வைக்கமாட்டேன் என்று தெரிவித்தார். தற்போது அந்த அணியுடன் சுயலாபத்திற்காக கூட்டணி அமைத்துள்ளார்.

சி.ஏ.ஏ. சட்டம் மக்களவையில் அமல்படுத்தியபோது அதனை ஆதரித்து பேசினார். கிராமப்புற மக்களுக்கு வேலை உத்தரவாதம் அளித்து வந்த 100 நாள் வேலை திட்டத்தை மத்திய அரசு நீக்க முயற்சி எடுத்து வருகிறது.

டெல்லியில் அமர்ந்து கொண்டு தமிழ்நாட்டில் இருக்கும் கிராமத்தில் எந்த ஊரில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கலாம் என அவர்கள் முடிவு செய்ய உள்ளனர். இந்த திட்டத்தில் மாநில அரசுக்கு கொடுத்த நிதி குறைக்கப்பட்டு விட்டது. ஆனால் இதைப்பற்றி எல்லாம் எடப்பாடி பழனிசாமி பேசமாட்டார்.

தற்போது தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகத்தில் மோடியும், அமித்ஷாவும் சுற்றுலா பயணியை போல வந்து செல்கின்றனர். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்த யாருக்கும் எதிர்காலம் இல்லை. அந்த அக்கறையில்தான் எடப்பாடி பழனிசாமிக்கு வருகிற தேர்தலில் எதிர்கட்சி வரிசையாவது கிடைக்குமா? என்பது சந்தேகமாக உள்ளது. தமிழகத்திற்கு துரோகம் செய்த அனைவரும் ஒரே கூட்டணியில் உள்ளனர். பழனிசாமி தமிழகத்திற்கு மட்டும் துரோகம் செய்தவர் இல்லை. தன்னை வளர்த்த கட்சிக்கும் துரோகம் செய்தவர்.

தன்னை பதவியில் அமர வைத்த சசிகலா, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரையும் கட்சியை விட்டு விலக்கியவர். எனவே எடப்பாடி பழனிசாமியால் வருகிற தேர்தலில் நிச்சயம் வெற்றி பெற முடியாது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் 2-வது முறையாக ஆட்சி பொறுப்பில் அமரும்போது தி.மு.க.வால் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். இளைஞர்கள், பெண்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com